# செயலாற்றுகை

# அறிக்கை

# 2018

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

**பதிப்பு**

விவசாயத் திணைக்களம்

பேராதனை

இலங்கை

**2019**

இலங்கை, பேராதனை விவசாயத் திணைக்கள முன்னேற்ற கண்காணிப்பு மதிப்பீட்டுப் பிரிவினால் இவ்வறிக்கை தொகுக்கப்பட்டு விவசாய வெளியீட்டுப் பிரிவில் அச்சிடப்பட்டது.

சிறிய பந்திகளை விமர்சிக்கவும், மதிப்பீடு செய்யவும், மேற்கோள் காட்டுவதையும் தவிர, ஏனைய உரிமைகள் யாவும் ஆக்கியோருடையதே. விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் முன் அனுமதியின்றி இவ்வறிக்கையின் எப்பகுதியையும் மீள் பிரசுரிக்கவோ, அல்லது நிழற்படப் பிரதியெடுக்கவோ அல்லது இலத்திரனியல் முறையாக சேமிக்கவோ கூடாது. வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்கான அனுமதி சரியான காரணமின்றி நிராகரிக்கப்படமாட்டாது. இலங்கை விவசாயத் திணைக்களம் வர்த்தக நோக்கமற்ற விடயங்களுக்காக இவ்வறிக்கையைப் பயன்படுத்துவதற்குக் கட்டணம் அறவிடுவதில்லை. விவசாய ஆராச்சிக்கும் அபிவிருத்திக்கும் எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது என நாம் நம்புகின்றோம்.

# தூர நோக்கு

தேசத்தின் சுபீட்சத்துக்காக விவசாயத்தில் உன்னத நிலையை அடைதல்

# பணிக்கூற்று

மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தினை விருத்திசெய்து பரவலாக்குதல் தொடர்பான சேவைகளை விவசாயிகளை முன்னிலைப்படுத்தி அதன் சகல பங்குதாரர்களுக்கும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் தேசத்தின் உணவுப் பாதுகாப்பையும் போஷணைப் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்தும் நிலைபேறானதும் சமநிலையானதுமான விவசாய அபிவிருத்தியை எய்துதல்.

## பணிப்பாளர் சபை - 2019

கலாநிதி. டபிள்யூ.எம்.டபிள்யூ. வீரகோன் - (விவசாயப் பணிப்பாளர் நாயகம்)

கலாநிதி. ஆர்.எஸ்.கே. கீர்த்திசேன - மேலதிக பணிப்பாளர் நாயகம் (ஆராய்ச்சி)

திருமதி. எச்.எம்.ஜே. இலங்கோன் மெனிகே - மேலதிக பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி).

திருமதி. எச்.பீ.டி.எம். சரத்சந்திர - மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிருவாகம்)

கலாநிதி ஏ. மாலிமா பெரேரா - பணிப்பாளர் (வயற் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி)

கலாநிதி. பிரியந்த வீரசிங்ஹ - பணிப்பாளர் (பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி)

கலாநிதி. ஈ.ஆர்.எஸ்.பி. எதிரிமான்ன - பணிப்பாளர் (பழ ஆராய்ச்சி அபிவிருத்தி)

கலாநிதி. டீ.எம்.ஜே.பீ. சேனாநாயக்க - பணிப்பாளர் (நெல் ஆராய்ச்சி அபிவிருத்தி)

கலாநிதி. எஸ்.எச்.எஸ்.ஏ. டீ. சில்வா - பணிப்பாளர் (இயற்கை வள முகாமைத்துவம்)

திரு. டி.எஸ்.என். ஏக்கநாயக்க - பணிப்பாளர் (விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு)

திரு. கே.டீ. புஸ்பானந்த - பணிப்பாளர் (விதை, நடுகைப் பொருள் அபிவிருத்தி)

கலாநிதி. ஆர்.எம். ஹேரத் - பணிப்பாளர் (சமூக பொருளியல், திட்டமிடல்)

திருமதி. கே.என்.எஸ். ரனதுங்க - பணிப்பாளர் (விரிவாக்கல், பயிற்சி)

திரு. எஸ். பெரியசாமி - பணிப்பாளர் (தேசிய விவசாயத் தகவல் தொடர்பாடல்)

திரு. பி.எம்.டீ.டபிள்யு.டீ பல்லாவல - பணிப்பாளர் (நிருவாகம்)

திரு. கே.ஜீ.எஸ்.பி. களுவாராச்சி - பணிப்பாளர் (தாபனம்)

பொறியியலாளர். சீ.எல். ராஜபக்ஷ - பிரதம பொறியியலாளர்

திரு. பராக்கிரம பிரேமரத்ன - பிரதம கணக்காளர்

## ஆலோசகர்கள்

கலாநிதி. ஆர்.எஸ்.கே. கீர்த்திசேன

எச்.என்.ஜே. இலங்கோன் மெனிகே

## ஒருங்கிணைப்பாளர்கள்

பி.சீ.பீரிஸ்

ஈ.எம்.ஜ.சீ.கே. வேரபிட்டிய

## மொழிபெயர்த்தல் மற்றும் சரிபார்த்தல்

ஆர். சிவநேசன்

எம்.எஸ். ரினூஸ்

எஸ். சஞ்ஜீபன்

என். ரவிச்சந்திரன்

எம்.எப்.என். ஷிபா

## பக்க வடிவமைப்பு

ஜே. பவானி

## முகப்பு வடிவம்

தேசிய விவசாயத் தகவல் தொடர்பாடல் நிலையம்

## அச்சிடல்

விவசாய வெளியீட்டு அலகு

# ஒருங்கிணைப்பு அலுவலர்கள்

- வயற் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், மஹா இலுப்பள்ளம - திரு. ஆர்.ஏ.சீ.ஜே. பெரேரா/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- அவரைத் தானியங்கள், எண்ணெய்ப் பயிர்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், அங்குணகொலபெலெஸ்ஸ - திருமதி. டீ.பி.பி. லியனகே/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், அரலகன்வில - திரு. டபிள்யூ.ஏ. விஜிதவர்ண/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், கிளிநொச்சி - கலாநிதி திரு. எஸ்.ஜே. அரசகேசரி/ மேலதிகப் பணிப்பாளர்
- பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், கண்ணொறுவ - கலாநிதி. எஸ்.கே.வாசல/ மேலதிகப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)
- உணவு ஆராய்ச்சிப் பிரிவு, கண்ணொறுவ - திருமதி. கே.டபிள்யூ.பி.டீ. கரந்தவல/ அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், பண்டாரவள - திருமதி. ரீ.கே.ஏ.ஐ. ஹட்ஜி/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- பிராந்திய விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம் மாகந்துறை - திருமதி. எஸ்.ஏ.எஸ்.எம். குமாரி/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- விவசாய ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையம், சீத்தாஎலிய - திருமதி. எச்.ஏ.எஸ்.என். ஹெட்டியாராச்சி/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- விவசாய ஆராய்ச்சி நிலையம், தெலிஜ்ஜவில - திருமதி. எம்.பீ. வீரசூரிய/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- விவசாய ஆராய்ச்சி நிலையம், கிராந்துருக்கோட்டை - திரு. பி.ஜீ.எஸ். ஷாந்த/ பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)
- பழ ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவகம், ஹொறண - கலாநிதி. ஈ.ஆர்.எஸ்.பி. எதிரிமான்ன/ மேலதிகப் பணிப்பாளர்
- பழப்பயிர் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிலையம், கண்ணொறுவ - திருமதி. சீ. அபேகுணசேகர/ பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)
- தாவர வைரசு சுட்டியிடல் நிலையம், ஹோமாகம - கலாநிதி. பீ.எம்.வீ.எஸ். பஸ்நாயக்க/ பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)
- நெல், அபிவிருத்தி நிறுவகம், பதலகொடை - கலாநிதி. கபிலசிறி உடவெல/ உ.வி.ப. (ஆராய்ச்சி)
- பிராந்திய நெல், மற்றும் அபிவிருத்தி நிலையம், போம்புவலை - திரு. டபிள்யூ.டீ.பி. வீரசிங்ஹ/ உ.வி.ப. ஆராய்ச்சி)
- இயற்கை வள முகாமைத்துவ நிலையம், பேராதனை - கலாநிதி. எச்.கே. கடுபிடிய/ பிரதிப் பணிப்பாளர் (ஆராய்ச்சி)
- விதை அத்தாட்சிப்படுத்தல், தாவரப் பாதுகாப்பு நிலையம், கண்ணொறுவ - திருமதி. எஸ்.எஸ்.கே. ஹேமசந்ர/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- விதை அத்தாட்சிப்படுத்தல் சேவை கண்ணொறுவ - திருமதி. ஆர்.ஏ.ஐ.எஸ். ஆரியரத்ன/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- தாவரப் பாதுகாப்புச் சேவை கண்ணொறுவ - திருமதி. ரீ.என். இஹலகமகே/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- பீடைகொல்லிப் பதிவாளர் அலுவலகம், பேராதனை - கலாநிதி. ஜே.ஏ. சுமித்/ பீடைகொல்லி பதிவாளர்
- தாவரக் கருவள நிலையம், கண்ணெறுவ - திருமதி. ஏ.என். அபேகோன் / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்)
- தேசிய தாவர தடுப்புக் காப்புச் சேவை, கட்டுநாயக்க - திருமதி. எல்.எச்.ஆர்.என். குணசிங்ஹ/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையம், பேராதனை- திரு. எம்.சீ. ஜயசிங்ஹ/ பிரதிப் பணிப்பாளர் (அபிவிருத்தி)
- சமூக பொருளியல், திட்டமிடல் நிலைமை, பேராதனை - திருமதி. பீ.ஆர். வலிசிங்ஹ/ உ.வி.ப. (பொருளியல்)
- விரிவாக்கம், பயிற்சிக்கான நிலையம், பேராதனை - திருமதி. கே.என்.எஸ். ரனதுங்க/ மேலதிகப் பணிப்பாளர்
- தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கண்ணொறுவ - திருமதி. ஐ.எஸ்.எம். ஹலீம்தீன்/ உ.வி.ப. (அபிவிருத்தி)
- நிர்வாகப் பிரிவு, பேராதனை - திருமதி. டபிள்யு.எஸ்.பி. விக்ரமஆராய்ச்சி/ உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்)
- பொறியியல் பிரிவு, பேராதனை - பொறியியலாளர் சீ.எல். ராஜபக்ஷ/ பிரதான பொறியியலாளர்
- நிதிப் பிரிவு, பேராதனை - திரு. டபிள்யு.எம்.எஸ்.பி. விஜேகோன்/ வரவுசெலவுத் திட்ட உதவியாளர்
- முன்னேற்ற கண்காணிப்பு, மதிப்பீட்டுப் பிரிவு, பேராதனை - திரு. பி.சீ. பீரிஸ்/ மேலதிகப் பணிப்பாளர்

## 2.1.3. பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகம் (பீ.நா.ப.அ.) - பேராதனை

1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தை அமுல்படுத்தும் முகமாக பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகமானது 1984 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. பீடைநாசினிப் பதிவாளர் இலங்கையில் பீடைநாசினிகளைப் பதிவு செய்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட, பொறுப்புக்கள் வழங்கப்பட்ட அங்கீகாரம் பெற்றவராவார். (1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டம், திருத்தம் செய்யப்பட்ட 1994 இன் 06 ஆம் இலக்க சட்டம், 2011 இன் 31 ஆம் இலக்க சட்டம் என்பவற்றின் பிரகாரம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.) சட்டத்திற்கமைய, பீடைநாசினிப் பதிவாளரின் ( விவசாயப் பணிப்பாளர் நாயத்திற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்) கடமையானது இறக்குமதி செய்யப்படுகின்ற மற்றும் இலங்கையில் உற்பத்தி / சேர்மானம் செய்யப்படுகின்ற பீடைநாசினிகளை ஒழுங்குபடுத்தல், அவற்றின் தரத்தை உறுதிப்படுத்தலும் பாதுகாப்பான பாவனையும், விவசாய உற்பத்திகளில் அவற்றின் மீந்து நிற்கக்கூடிய அதி உயர் எல்லையை மதிப்பீடு செய்தலும் பிரகடனஞ் செய்தலுமாகும்.

பீ.நா.ப. அலுவலகத்தின் வேலைப்பளுவானது, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பீடைநாசினிகளைப் பதிவுசெய்தல், இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் வழங்கல், இலேபல் மற்றும் விளம்பரங்களை ஒழுங்குபடுத்தல், பீடைநாசினி இறக்குமதியாளர்களை பதிவு செய்தல், பீடைக் கட்டுப்பாட்டு சேவைகள் மற்றும் பீடைநாசினி வியாபாரம், இறக்குமதி செய்யப்பட்ட பீடைநாசினிகளின் தரத்தினை எழுந்தவாறான முறையில் பரிசீலனை செய்தல், விவசாய உற்பத்திகளில் பீடைநாசினி மீதியினை பரிசோதனை செய்தல் போன்ற நடவடிக்கைகளின் பிரதிநிதித்துவம் காரணமாக அதிகரித்துள்ளது. பீடைநாசினிப் பதிவாளர் அலுவலகத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்ற பீடைநாசினி ஒழுங்காற்று நடவடிக்கைகள் முக்கிய இரு பிரிவுகளுள் உள்ளடக்கப்படுகின்றன. (1)
பீடைநாசினிகளை பதிவு மற்றும் மீள்பதிவு செய்வதன் மூலம் ஒழுங்குபடுத்தல். (2)
பிந்திய பதிவு நடவடிக்கைகள் ( ஏனையவை உள்ளடங்களாக) பீடைநாசினி சேர்மானங்கள் பொதியிடும் கைத்தொழிற்சாலைகள், களஞ்சியம் மற்றும் விற்பனை நிலையங்கள், அங்கீகாரம் அற்ற நடவடிக்கைகளை கண்டுபிடித்தலும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளலும், பீடைநாசினியின் தரத்தினைப் பகுப்பாய்வு செய்தல், விவசாய உற்பத்திகளில் மீந்து நிற்கும் பீடைநாசினியின் அளவினைப் பகுப்பாய்வு செய்தல், உணவுப் பொருட்களில் சட்ட ரீதியில் அனுமதிக்கப்பட்ட ( எம்ஆர்எல்) அதி உயர் மீந்து நிற்கும் அளவிலான சரிப்படுத்தல் பீடைநாசினி நஞ்சூட்டத்தைக் கண்காணிப்பு செய்தல் போன்றனவாகும். இருப்பினும் நாட்டினுள் சாமர்த்தியமான மொத்தப் பீடைநாசினி ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்கு உட்புற பதிவு நடவடிக்கைகளைவிடவும் முக்கியமாக பிந்திய ஒழுங்காற்று நடவடிக்கைகள் சரி சமமாகவோ அல்லது சக்தி வாய்ந்த முறையிலோன முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும். 2018 ஆம் ஆண்டில் முற்பதிவு, பிற்பதிவு நிகழ்ச்சிகளிற்கிடையிலான இடைவெளியினை விளக்குவதற்காக 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் தொடர்புடைய பல ஆரம்ப நிலை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

### நோக்கு

இலங்கையில் மனித சுகாதாரம் மற்றும் சூழல் நேயம் மிக்க உயர் தரமான பீடைநாசினிகளின் பாதுகாப்பானதும் சாமர்த்தியமானதுமான பாவனையை உறுதி செய்தல்.

### பணிக்கூற்று

பீடைநாசினி, அதனுடன் தொடர்புடைய சுகாதார, சுற்றாடல் மீதிகளைக் குறைத்து, தேவையான தேர்ச்சி மற்றும் அவசியமான விழிப்புணர்வு நடவடிக்கைகளை உறுதி செய்து, இறுதியாக உயர் சாமர்த்தியம் வாய்ந்த இரசாயனப் பீடைக் கட்டுப்பாட்டினை அடைந்துகொள்ளும் வகையில் முகாமைத்துவம் செய்தல்.

**அட்டவணை 2.1.3.1: விவசாயத்திற்காக இறக்குமதி செய்யப்படுகின்ற பீடைநாசினி புள்ளி விபரம் - 2017 ஆம் ஆண்டைத் தழுவிய**

| பீடைநாசினிப் பிரிவு | கன அளவு (மெ.தொ.) |
|---|---|
| **தொழில்நுட்ப பதார்த்தங்கள்** | |
| பூச்சிக்கொல்லிகள் | 17.7 |
| பங்கசு நாசினிகள் | 0 |
| களை நாசினிகள் | 90.0 |
| **சேர்மானங்கள்** | |
| பூச்சிக்கொல்லிகள் | 658.03 |
| பங்கசு நாசினிகள் | 664.12 |
| களை நாசினிகள் | 1,298.32 |

## வரவு செலவு

வெவ்வேறு வாக்குகளின் கீழான வருடாந்த ஒதுக்கீடும், செலவினங்களும் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.3.2: வருடாந்த வரவு செலவு - 2018**

| வாக்கு | ஒதுக்கீடு (ரூ.) | செலவினம் (ரூ.) | செலவினம் (%) | வருமானம் |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | 3,467,485 | 3,052,654 | 88 | - |
| மூலதனம் | 7,767,182 | 5,036,784 | 65 | - |
| திட்டங்கள் | | | | |
| • விவசாய இரசாயனங்கள் சூழல், மனித சுகாதாரத்திற்கு விளைவிக்க க்கூடிய தாக்கங்களைக் குறைத்தல் | 6,620,900 | 6,616,698 | 100 | - |
| • ஏற்றுமதி சந்தையை அனுகுவதற்கான சூழலியல் அத்தாட்சிப்படுத்தல்களை உறுதிப்படுத்தல் (ஏற்றுமதி தரத்திலான விவசாய உற்பத்திகள், ஐரோப்பிய சமூக சந்தையுடன் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக) | 9,000,000 | 8,928,575 | 99 | - |

| வாக்கு | ஒதுக்கீடு (ரூ.) | செலவினம் (ரூ.) | செலவினம் (%) | வருமானம் |
|---|---|---|---|---|
| • பச்சையான பழங்கள் மற்றும் மரக்கறிகளில் சிறந்த விவசாய நடவடிக்கைகள், (GAP) மற்றும் பீடைநாசினி மீதிக் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தலை உறுதிசெய்தல் | 78,000,000 | 76,446,433 | 98 | - |
| பதிவுசெய்யும் விண்ணப்பங்களுக்கான கோவைக் கட்டணம் | | | | 5,973,500 |
| பதிவுக்கட்டணம் | | | | 1,569,000 |
| மீள் பதிவுக் கட்டணம் | | | | 776,000 |
| பீடைநாசினி விநியோக அனுமதிப் பத்திரக் கட்டணம் | | | | 725,710 |
| பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைப் பதிவுக் கட்டணம் | | | | 40,000 |
| பீடைக் கட்டுப்பாட்டு சேவை அனுமதிப்பத்திரத்தை மீளப்புதுப்பித்தலுக்கான கட்டணம் | | | | 265,000 |
| இறக்குமதி அனுமதிப்பத்திரக் கட்டணம். | | | | 835,000 |
| கம்பனி பதிவுக் கட்டணம் | | | | 900,000 |
| விவசாய இரசாயன விற்பனையும் தொழில்நுட்ப உதவிகளும் விண்ணப்பக் கட்டணம் | | | | 43,750,.00 |
| **மொத்தம்** | **104,855,567** | **100,081,144** | **95** | **11,127,960** |

## முன்னேற்றம்

### உற்பத்திப் பதிவுகளும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு பகுதி I, II

#### புதிய பீடைநாசினிகளின் பதிவு

நாட்டினுள் உற்பத்தி, பரிகரணம், இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் அனைத்து பீடைநாசினிகளும் 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படல் வேண்டும். இதற்கிணங்க 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் பீடைநாசினிகள் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டியவையென வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2018 ஆம்

ஆண்டில் PeTAC எனும் குழுவினால் பின்வரும் பீடைநாசினி உற்பத்திகள் பிரிவு 7(1)(அ) இன் கீழ் 3 வருட காலத்திற்கு பதிவு செய்வதற்கும் அனுமதிப்பத்திர விநியோகத்திற்கும் தகுதியானவை எனவும் அல்லது பிரிவு 7(1)( ஆ) இன் கீழ் 1 வருட காலத்திற்கு பதிவு செய்வதற்கும் நிபந்தனைகளுடன்கூடிய அனுமதிப்பத்திர விநியோகத்திற்கும் தகுதியானவை எனவும் அனுமதி வழங்கப்பட்டன.

2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 27 பீடைநாசினி முறைப்படுத்தலில் 14 புதிய தொழிற்படு சேர்மானங்களும் 14 ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்த மாற்றீட்டு தொழிற்படு சேர்மானங்கள் ( பீடைநாசினி பண்டங்கள்) அல்லது முறைப்படுத்தல்களின் கூட்டு பாவனைக்காகப் பதிவு செய்யப்பட்டன. இத்தொழிற்படு சேர்மானங்களுள் மூன்று வைத்தியசாலைகளுக்கான தொற்று நீக்கிகளான குளோரொக்ஸைலினோல் 98% கொகோ புரோபைலீன் டயமின் 20% மற்றும் சித்திரிக் அமில என்ஹைட்ரசு 50%, 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கான புதிய வழிகாட்டல்கள் விருத்தி செய்யப்பட்ட, 14 புதிய தொழிற்படு சேர்மானங்களுள் எட்டு விவசாய நோக்கங்களுக்கான சல்பொக்ஸா புளோர், மெட்ரோசீன், ஹலோ சல்பியூரோன் மீதைல், நிகோ சல்பியூரோன், ப்ளோபைரொக்ஸி பென் பென்சைல், பென்டசோன், ப்ரோபொக்ஸிடிம் மற்றும் டயபெனாசில் ஒன்று நுளம்புக் குடம்பி நாசினியான S - மெதோபிறீன் அட்டவணை 2.1.3.3 இல் இப் பொருட்கள் நிரற்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.3.3: 2018 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட பீடைநாசினிகள்**

| தொழிற்படு சேர்மானத்தின் பெயர், வலிமை மற்றும் முறைப்படுத்தலின் வடிவம் | பாவனைப் பிரிவு சிபாரிசுகள் | WHO ஆபத்தின் தரம் |
|---|---|---|
| Sulfoxaflor 50% WG | பூச்சிநாசினி/ நெல் மூட்டுப்பூச்சி; (நெல்) ப்ளீ வண்டு, ப்ளீ தத்தி ( கீரைவகை - மரக்கறிகள்); வெண் ஈ, ஏபிட்ஸ் (பூசணி தாவரங்கள்) | III |
| Acetamiprid 20% SP | பூச்சிநாசினி/ வெண் மூட்டுப்பூச்சி (அன்னாசி) | II |
| Halosulfuron-methyl 40% SC | களைநாசினி/ அகன்ற இலைகள் (சோளம்) | III |
| Nicosulfuron 4% OD | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (சோளம்) | III |
| Diuron 80% WP | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (அன்னாசி) | IV |
| Azoxystrobin 50% WG | பங்கசு நாசினி/ பின்வெளிறல் (உருளைக்கிழங்கு) | III |
| Pymetrozine 50% WG | பூச்சிநாசினி/ கபிலத்தத்தி ( நெல்), ஏபிட்ஸ், த்ரிப்ஸ், வெண்பனிப்பூச்சி ( மிளகாய், வெள்ளரி, இலை மரக்கறி, உருளைக்கிழங்கு, தக்காளி) | IV |
| Deltamethrin 318 mg/m$^2$ | பூச்சிநாசினி/ களஞ்சியப் பீடைகள் (நெல்) | - |
| Florpyrauxifen-benzyl 2.5% EC | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (நெல்) | IV |
| Bentazone 48% SL | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (நெல்) | III |
| Cyhalofop-butyl + Pyribenzoxim 8.5% EC | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (நெல்) | III |

| தொழிற்படு சேர்மானத்தின் பெயர், வலிமை மற்றும் முறைப்படுத்தலின் வடிவம் | பாவனைப் பிரிவு சிபாரிசுகள் | WHO ஆபத்தின் தரம் |
|---|---|---|
| Azoxystrobin 12% + Tebuconazole 20 % SC | பங்கசுநாசினி/ டௌனி மில்டிவ் ( பீர்க்கு), பின் வெளிறல் (தக்காளி) | III |
| Pyrazosulfuron-ethyl 0.75% + Pretilachlor 30% DF | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (நெல்) | III |
| Propanil 60% + MCPA 7.5% DF | களைநாசினி/ புற்கள், அகன்ற இலைகள் (நெல்) | III |
| Dimefluthrin 5%EC | பூச்சிநாசினி/ நுளம்புச் சுருள் | IV |
| Glyphosate 36% SL | களைநாசினி/ பயிர்ச்செய்கை நிலமல்லாத (தேயிலை, இரப்பர் செய்கை நிலங்களுக்கு மட்டும்) | III |
| Profoxydim 7.5% EC | களைநாசினி/ புற்கள் (நெல்) | IV |
| Aluminium phosphide 56% GE | தூமமாக்கி/ சிவப்பு மா வண்டு, சிவப்பு தானிய வண்டு, Angoumais தானிய மொத், தானியத் துளைப்பான், நிலக்கடலை துளைப்பான், மா மைட்ஸ், புகையிலை மொத் என்பவற்றின் கட்டுப்பாடு, சிகரெட் வண்டு (கட்டுப்படுத்தப்பட்ட நிலையில்) | I |
| Chloroxylenol 98% TC | தொற்றுநீக்கி/ பொதுவான உயிரியல் கொல்லி | III |
| Cocopropylene diamine 20% SL | தொற்றுநீக்கி - வைத்தியசாலை, சத்திர சிகிச்சை உபகரணங்கள் (கட்டுப்பாடான நிலைமையின் கீழ்) | - |
| Citric acid anhydrous 50% AL | தொற்றுநீக்கி/ தூய்தாக்கல், ஹேமோடயலைசிஸ் இயந்திர வெப்பத் தூய்தாக்கல் மற்றும் டிகல்சிபிகேஸன் ( கட்டுப்பாடான நிலைமைகளின் கீழ்) | - |
| s-Methoprene 5% CS | பூச்சிநாசினி/ நுளம்புக் குடம்பி நாசினி | III |
| Tiafenacil 5% ME | களைநாசினி/ பயிர்ச்செய்கையற்ற நிலங்களில் | III |
| Pymetrozine 50% WG | | III |
| Azadirachtin 0.75% EC | பூச்சிநாசினி/ இலையுண்ணி குடம்பிகள் (கோவா) | - |
| Glufosinate ammonium 15% SL | களைநாசினி/ பயிர்ச்செய்கையற்ற நிலங்களுக்கு | III |

## பீடைநாசினிகளின் மீள்பதிவு

ஒரு உற்பத்தியின் பதிவானது ஒரு வருட காலத்திற்கு செல்லுபடியாவதுடன், அக்காலம் முடிவடைந்த பின்னர் புதிய விஞ்ஞான வழிமுறைகளுக்கிணங்க அதன் தன்மையானது மீள பரீட்சிக்கப்படல் வேண்டும். இத்திட்டத்தின் கீழ் உற்பத்தியின் தரம், பாதுகாப்பு மற்றும் அதன் தொழிற்படு தன்மை என்பன பரிசோதனைகள் மற்றும் ஆவணங்களின் சான்றுகளின் பிரகாரம் அமைந்துள்ளனவா என கருதப்படுகின்றன. அதிகாரபூர்வமிக்க அனைத்து நிறுவனங்களிலிருந்தும்

சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ( உற்பத்தி செய்கின்ற நாடு, வேறு நாடுகளின் பதிவுகள் உற்பத்திகள், அவற்றை உற்பத்தி செய்த மூலாதாரம் பற்றிய தகவல்கள், தோற்றவமைப்பு, உற்பத்தியின் தரம் பற்றிய தரம் வாய்ந்த ஆய்வுகூடங்களின் பரிசோதனை அறிக்கை, GLP உடன்பாடு மற்றும் ISO/ IEC 17025 ஆய்வுகூடங்களின் மூலப்பிரதி அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க வேறு ஆவணங்கள்) தற்போது 600 ற்கும் மேற்பட்ட வர்த்தக பீடைநாசினிகள் (பெரும்பாலானவை விவசாய பீடைநாசினிகள்) இல்லப் பாவனை மற்றும் கட்டுப்பாடான பிரிவுகளைச் சேர்ந்தவையென கையாளப்படுகின்றன. மீளப் பதிவிற்கான விண்ணப்பங்களின் எண்ணிக்கை மீளப் பதிவு சுற்றுகையைப் பொறுத்து வேறுபடுகின்றது. பதிவு, மீளப்பதிவு நடவடிக்கைகள் அதனுடன் தொடர்பான பல பகுதிகளினால் ஒன்றிணைந்து நடாத்தப்படுகின்றன. (அவையாவன, விவசாய பீடைநாசினி உற்பத்தி பதிவு மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுப் பகுதி I, வீட்டுபயோக, பொது சுகாதார மற்றும் கைத்தொழில் பீடைநாசினி உற்பத்திகளின் இறக்குமதி கட்டுப்பாட்டுப் பகுதி II) வருடத்தில் பெறப்பட்ட வளர்ச்சி பின்வருமாறு காட்டப்படுகின்றது.

### உற்பத்திப் பதிவுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு பகுதி I ( விவசாய பீடைநாசினிகள்)

- புதிய பதிவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் - 83
- மீளப் பதிவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் - 125
- புதிய பதிவுகளுக்கான சான்றிதழ் தயாரிப்பு - 96
- மீளப் பதிவுகளுக்கான சான்றிதழ் தயாரிப்பு - 228

### உற்பத்திப் பதிவுகள் மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டு பகுதி II ( வீட்டுப்பாவனை, பொதுச்சுகாதார மற்றும் கைத்தொழில் பீடைநாசினிகள்)

- புதிய பதிவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் - 11
- மீளப் பதிவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் - 66
- புதிய பதிவுகளுக்கான சான்றிதழ் தயாரிப்பு - 18
- மீளப் பதிவுகளுக்கான சான்றிதழ் தயாரிப்பு - 60

கடந்த வருடத்தினுள் 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் 402 உற்பத்திகள் பதிவு, மீளப்பதிவுகளுக்கு தகுதியானவையாய் இருந்ததுடன், 3 வருட காலத்திற்கு செல்லுபடியாகும் வகையிலான அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

### பீடைநாசினி ஸ்தாபித்தல்களின் பதிவு

10.07.2014 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேலதிக அரச வர்த்தமானி இல 1870/63 இன் 5 ஆம் பிரிவின் ( அ), (ஆ) என்பவற்றின் விதப்புரைகளிற்கிணங்க மனித சுகாதாரம், சுற்றாடல் மற்றும் வனஜீவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் முகமாக பீடைநாசினி வியாபாரம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் துல்லியமாக நெறிப்படுத்த வேண்டியதன் காரணமாக அனைத்து பீடைநாசினி கம்பனிகளும், பீடைநாசினிப் பதிவாளரிடம் பதிவு செய்யப்படல் வேண்டும் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. 29.12.2017 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட PeTAC இன் 89 ஆவது கூட்டத்தொடரில் ஏற்கனவே 17.07.2014, 23.02.2016 மற்றும் 25.10.2016 ஆகிய திகதிகளில் வெளியிடப்பட்ட அரச சுற்றறிக்கை இல RP/2017-02, தர அதிகாரம், 30.01.2017 ஆம் திகதியிடப்பட்ட சுகாதாரம், சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றிற்கிணங்க அனைத்து கம்பனிகளுக்கும் 31.03.2018 இறுதித் திகதியாக

உடன்பாடு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் 4 ஸ்தாபனங்கள் அவசிய உடன்பாடுகளை திரையிடல் செய்தன.

## கம்பனிகளின் பதிவு: கள மதிப்பீடு மற்றும் பிரயோகக் கட்டணம் தவிர்ந்த

மூன்று வித உற்பத்திகளை கையளிக்கின்ற மூன்று இறக்குமதியாளர்களுக்கு PeTAC பீடைநாசினி கட்டுப்பாட்டு சட்டத்தின் 5( அ) பிரிவின் கீழ் கள மதிப்பீடு, பிரயோகக் கட்டணங்களிலிருந்து விடுவிப்புச் செய்துள்ளது. ( கைத்தொழிற்றுறை/ பொதுச் சுகாதார பீடைநாசினிகள்)

## சுட்டி ( இலேபல்) திரையிடலும், விளம்பர பதாதைகளும்

சுட்டிகளை அனுமதி செய்யும் வழிமுறையானது சரியான தகவல்களை இறுதிப் பாவனையாளருக்கு பரவச் செய்கின்ற மீண்டுவரும் நடவடிக்கையாகும். 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு சுட்டி அனுமதி செயற்பாடுகளுக்கான அதிகாரத்தினை வழங்கும் அதேவேளை, பிரிவு 18 இல் எந்தவொரு பீடைநாசினியும் களஞ்சியப்படுத்தல், கொண்டுசெல்லல், விநியோகித்தல், விற்பனைக்காக அளித்தல் அல்லது நாட்டினுள் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளின் போது சுட்டியில் அடக்கப்பட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. 2018 ஆம் ஆண்டில் பின்வரும் நடவடிக்கைகளின் குறித்த இலக்குகள் அடையப்பெற்றுள்ளன. திரையிடப்பட்ட சுட்டிகள் 915, விளம்பரங்களின் எண்ணிக்கை 162

1. விவசாய, வீட்டுப்பாவனை, பொதுச் சுகாதார மற்றும் கைத்தொழில் பீடைநாசினி சுட்டிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை – 1047
2. விவசாய, வீட்டுப்பாவனை, பொது சுகாதார மற்றும் கைத்தொழில் பீடைநாசினிகளின் தர உயர்வுக்காக அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகள் – 152

## இறுதிப் பாவனையாளர்களுக்கு பெருந்தொகையில் பீடைநாசினிகளை விற்பனை செய்வதற்கான ஒழுங்குவிதிகள்

1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் கீழ் பீடைநாசினி பொதியிடல் தொடர்பான விதிமுறைகள் இடம்பெற்றுள்ளன. அனுமதிக்கப்பட்ட எந்தவொரு கொள்கலனும் சட்டத்தின் 8 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்ட விபரங்களுடன் கூடிய இலேபல்கள் இடப்பட்டிருத்தல் வேண்டும். பாவனையாளர்கள் பாவிக்கும் போதோ, விபத்து அல்லது வெளியில் சிந்தப்படின் உள்ளே காணப்படுகின்ற பதார்த்தத்தினை அடையாளம் காணக்கூடியதாகவே சட்டத்தில் இது வலியுறுத்தப்படுகிறது. பாவனையாளர்/ பிரயோகிப்பாளர் சட்டத்தில் குறிப்பிடப்பட்டவாறு வேறு இலேபல்கள் இடப்பட வேண்டிய அவசியத்திற்கு பொறுப்பாளராகின்றார். 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இது தொடர்பான RP/2018/10 எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை மூலம் அதிகார பூர்வமற்ற முறையில் பெருந்தொகையில் விநியோகம் செய்வதனை பாதுகாத்தல் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. அனைத்து பெருந்தொகை பொதிகளும் விற்பனை, கொண்டுசெல்லல் மற்றும் பாவனை செய்யும்போது மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட இலேபல்களைக் கொண்டிருத்தல் வேண்டும். குறித்த விற்பனையாளருக்கு விற்பனை செய்யப்படுகின்ற சிறிய பொதிகளில் உள்ளடக்கப்பட்ட கொள்ளளவின் விபரம் முற்றாக இலேபலில் இடம்பெற்றிருப்பின் மற்றும் பீடைநாசினியின் அளவானது மிச்சம் எதுவுமின்றி முற்றாகப் பீடையை தடை செய்வதற்காகப் பாவிக்கப்படுகின்றது என்ற உத்தேசத்தின் அடிப்படையில் பெரும் தொகைப் பொதிகள் அனுமதிக்கப்படுகின்றன.

இதற்குப் புறம்பாக முற்றாக இலேபல் இடப்பட்ட பெருந்தொகைப் பொதிகளை (ஏற்கனவே பீடைநாசினி பதிவாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாதவிடத்து) குறித்த சிபாரிசினைக் கொண்டதும் அங்கீகாரம் பெற்ற களஞ்சிய நிபந்தனைகளின் கீழ் களஞ்சியப் படுத்தப்பட்ட பீடைநாசினிகளின் பெருந்தொகையினை தகுந்த நியாயமான காரணங்களுடன் பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்கள், உபவிநியோகஸ்தர்கள், சில்லறை வியாபாரிகள் மற்றும் அதிகாரபூர்வ பாவனையாளர் தவிர்ந்த ஏனைய நடவடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்வது பகுதி 8,16 மற்றும் 19 இனைத் துஷ்பிரயோகம் செய்ததாக கருதப்படும்.

## பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவும் அதன் நடத்துகையும்

பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது வருடத்தில் 06 கூட்டங்களை நடத்துவதற்கு கட்டாயப்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க (90-95) வது கூட்டங்களில் பீடைநாசினி ஒழுங்குவிதிகள் தொடர்பான இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் மிக முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## உயிரியல் பீடைநாசினி பதிவு பற்றிய மீளாய்வு

(PeTAC) பீடைநாசினி தொழில்நுட்பக் குழுக்கூட்டத்தின் ஆலோசனை மற்றும் அதிகாரத்தின் கீழ் உயிரியல் பீடைநாசினிகளைப் பதிவு செய்தல் அல்லது பதிவினைத் தவிர்த்தல் தொடர்பான வழிமுறைகளைக் கற்பதற்கும், தீர்மானம் செய்வதற்குமான மூன்று விற்பன்னர் மீளாய்வுகள் நடாத்தப்பட்டன. " சேதன பீடைநாசினிகளுக்கு பதிவு விதிவிலக்கு" தொடர்பான வரைபு அறிக்கையை குழு கலந்தாலோசித்தது. 2018 ஆம் ஆண்டில் 22 தேசிய பீடைநாசினி உற்பத்திகள் கணிப்பீடு செய்யப்பட்டன. 27.12.2018 ஆம் திகதி இடம்பெற்ற PeTAC இன் 95 ஆவது கூட்டத்தொடரில் உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட உயிரியல் பீடைநாசினிகளை விலக்கல் செய்வதற்கு தேவையான தரவுகளுடன் கூடிய இடைக்காலப் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதேவேளை டயடோமேஸஸ் ஏர்த் (kieselguhr) றினை பாதுகாப்பு, தானியப் பீடைகள், கரப்பான் போன்றவற்றின் கட்டுப்பாட்டிற்கான சந்தை கிராக்கி போன்ற காரணங்களுக்காக பதிவு செய்வதினின்றும் விலக்களிப்பதற்கான மிக முக்கிய தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. 2018 செப்டெம்பர் - டிசம்பர் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற விஷேட வேலைத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல்களின் போது பீடைநாசினி பதிவு டயடோமேஸஸ் ஏர்த் இன் மாதிரிகளை பொதி நீக்கம் செய்து (*Spodoptera frugiperda*) பட்டாளப் புழுவினைக் கட்டுப்படுத்துவதற்காக விசேட சிபாரிசு செய்து வணிக மயப்படுத்தியது. மேலும் பீடைநாசினி பதிவினால் பூச்சி கொல்லிகளின் தொழிற்படு தன்மையை அடிப்படையாகக் கொண்டு அவற்றின் தேர்வு, முதன்மைப்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு அவசியமான தொழில்நுட்ப பங்களிப்பிணையும் வழங்கியது.

## பீடைநாசினி சிபாரிசு குறிப்பேட்டின் மீளாய்வு

விவசாய திணைக்களம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ( தென்னை ஆராய்ச்சி நிறுவனம், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், இரப்பர் ஆராய்ச்சி நிறுவனம், கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்) விடய ஒழுங்குபடுத்தல் விஞ்ஞானிகளின் அவசிய ஆலோசனைகளுக்கமைவாக தேசிய பீடைநாசினி சிபாரிசு குறிப்பேடு வரைபாக்கஞ் செய்யப்பட்டது. அவசிய துறைமுகங்கள் விவசாய பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்ட விஷேட உபகுழுவினால் தற்போது மீளாய்வு செய்யப்படுவதுடன் அதன் II வது செயலமர்வு தரவுகள் மற்றும் மாதிரியினை

விஞ்ஞான மீளாய்வு மன்றத்தினால் கருதப்படுமளவுக்கு அபிவிருத்தி செய்யும் உபகுழுவின் வேலைத்திட்டங்களை பதிவு - பீ.நா.ப ஒருங்கிணைப்புச் செய்தது.

## வெவ்வேறு உற்பத்தி வகைகளுக்கான தொழில்நுட்ப உபகுழு

இலங்கையில் பாதுகாப்பானதும், சாமர்த்தியமானதுமான பீடைநாசினி முகாமைத்துவத்தின் நிலைபேறான தன்மைக்கு பீடைநாசினிகளின் முந்திய மதிப்பீடு மிக முக்கியமானதாகும். தொழில்நுட்ப உபகுழுவானது பல்வேறு உற்பத்தி வகைகளைக் கொண்ட விவசாய பொது சுகாதார மற்றும் கைத்தொழில் பரீட்சார்த்த பீடைநாசினிகளின் ஆரம்ப திரையிடல் மற்றும் அனுமதிக்கான செயன்முறைகளை வழங்குகின்றது. உபகுழு (விடய ஒழுங்குபடுத்தல்) 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5(1) ஆ பகுதியில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் (1994 இன் 6 ஆம் இலக்க மற்றும் 2011 இன் 31 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின்) ஸ்தாபிக்கப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் விவசாய பீடைநாசினி உப குழுவின் 03 கூட்டத்தொடர்கள் 28 - 30 வரையான) நடாத்தப்பட்டதுடன், பரீட்சார்த்த பீடைநாசினிகளுக்கான 26 பங்கசுநாசினி, 39 களைநாசினி மற்றும் 46 பூச்சிகொல்லி ஆகிய மொத்தம் 111 விண்ணப்பங்கள் திரையிடல் செய்யப்பட்டன. பொதுச் சுகாதார பீடைநாசினி உபகுழுவின் 02 கூட்டத்தொடர்கள் (17 - 18) 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன. இப்பிரிவைச் சேர்ந்த பரீட்சார்த்த பீடைநாசினிகளுக்கான 27 விண்ணப்பங்கள் திரையிடல் செய்யப்பட்டன.

## கிளைபோசேட் மீளாய்வு

அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கிணங்க (08.05.2018 இல 18/0925/801/004) பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினூடாக (CEYPETCO) தேயிலை, இறப்பர் பெருந்தோட்டங்களுக்கு அவசியமான கிளைபோசேட்டினை வழங்குவதற்கு அதன் உள்ளடக்கத்தில் பொலி ஒக்ஸி எதிலீன் அமைனைக் மேற்பரப்பியாகக் கொண்டிராத கிளைபோசேட் 36% SL இனைப் பதிவு செய்வதற்கு இணக்கம் தெரிவித்தது. 20.06.2018 ஆம் திகதி பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட “ மேற்பரப்பாக்கியை தழுவிய கிளைபோசேட் மீளாய்வு” எனும் அமைச்சரவை ஒப்பந்தப் பத்திரத்திற்கிணங்க பீடைநாசினி பதிவு விரிவான விஞ்ஞான மீளாய்வொன்றினை நடாத்தியது. மேற்கூறிய அறிக்கையைத் தழுவி 2018.06.20 ஆம் திகதி நடைபெற்ற பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக்குழுவின் தொடரில் தொடர்ச்சியான பதிவினை மேற்கொள்வதற்கான மூன்று சேர்மானங்களுக்கு உத்தரவாதமளிக்கப்பட்டது.

1. M/s ஹெக்ஸ்டார் தனியார் நிறுவனம் - Alkylpolyglycoside இனைத் தழுவிய
2. M/s பாம் கெமிகல்ஸ் தனியார் நிறுவனம் - N-dodecyl-n, n-dimethylglycine (Geronol®) இனைத் தழுவிய
3. M/s ஏசியாடிக் இன்டஸ்ட்ரீஸ் தனியார் நிறுவனம் - Cocoamidopropyl betaine (30%) இனைத் தழுவிய

## மீள்பதிவிற்கான வழிகாட்டியின் திருத்தப் பிரேரணை

பீடைநாசினி மீள்பதிவிற்கான வழிகாட்டியில் பின்வரும் நிர்வாக நிபந்தனைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

நிபந்தனை 1 : அனுமதிப்பத்திரம் அதற்குரித்தான காலம் முடிவடைவதற்கு 03 மாதத்திற்கு முன்னரே புதுப்பித்தல் செய்வதற்கான வேண்டுகோள் பத்திரத்துடன் அனுமதிப் பத்திரத்திற்குரிய விண்ணப்பமும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிபந்தனை 2 : உற்பத்திக்கான பதிவு காலாவதியாகி இருப்பின் பதிவிற்கான புதிய விண்ணப்பமானது குறிப்பிட்ட தொகையுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## மேலதிக பீடைநாசினிகளுக்கான பதிவினருக்கான புதிய வழிகாட்டல்

1980 இன் 33 ஆம் இலக்க பீடைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கூட்டுறவாக்கப்பட்டுள்ள சட்ட உடன்படிக்கைகளிற்கிணங்க பீடைநாசினிகளுக்கான பதிவினை 2 பிரிவுகளாக வரைவிலக்கணப் படுத்தப்பட்டுள்ளன. (1) இறக்குமதி, சந்தைப்படுத்தல் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் உத்தேசிக்கப்பட்ட பதிவினருக்குரித்தானதும் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காக அசல் உற்பத்தியை பதிவு செய்தல் (2) மேலதிக பதிவினை இறக்குமதி மற்றும் சந்தைப்படுத்தலுக்காக நீடிப்பு செய்யும் அதே வேளை, அசல் உற்பத்தியை சொந்த இறக்குமதி மற்றும் சந்தைப்படுத்தலுக்காகப் பதிவு செய்தல் 2018 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வெளியிடப்பட்ட RP/2018/Sup-REG/01 எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையில் உற்பத்திப் பொருளின் நம்பகத்தன்மை, தரவுகளின் பரிமாற்றம் போன்றவை பீடைநாசினி கைத்தொழிற்றுறையில் கையாளப்பட்டு பேணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வழிகாட்டல்கள் இடம்பெற்றுள்ளன.

## தொற்றுநீக்கிகள், பதமாக்கிகள் மற்றும் உயிரியல் நாசினிகளின் (நுண்ணங்கி தொற்றுநீக்கி) பதிவிற்கான புதிய வழிகாட்டல்கள்

2018.04.27 ஆம் திகதி நடைபெற்ற பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனைக்குழுக் கூட்டத்தின் 90 ஆவது கூட்டத்தொடரில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைவாக, அனைத்து வகை தொற்றுநீக்கிகள், நுண்ணங்கி எதிரிகள், கிருமிநாசினிகள், பாதுகாப்பாக்கிகள் மற்றும் வைத்தியசாலை, வீட்டு மேற்பரப்பு துய்தாக்கிகள் போன்றவை மேற்படி சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தப்பட வேண்டிய பதார்த்தங்கள் எனப் பிரகடனஞ் செய்யப்பட்டு 2018 மே மாதம் பதிவு செய்வதற்கான வழிமுறைகள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டன. M/s பி. பிரோன் என்ட் கம்பனியின் ( ஜேர்மன்) முறைபாட்டிற்கிணங்க, 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் 2015 இன் 5 ஆம் இலக்க தேசிய மருந்துகளை ஒழுங்குபடுத்தும் அதிகாரச் சட்டத்தின் கீழ் வைத்தியசாலை தொற்றுநீக்கிகளின் நகல் பதிவு தொடர்பான கூட்டம் சர்வதேச வர்த்தக அபிவிருத்தி அமைச்சில் 2018.10.10 அன்று இடம்பெற்றது.

வைத்தியசாலை தொற்றுநீக்கிகளுக்கான தெளிவான விதிமுறைகள் தொடர்பான தெளிவான பொறிமுறையினை தீர்மானிப்பதற்கான கலந்தாலோசனை ஒன்றினை பீடைநாசினி பதிவாளர், தேசிய மருந்தாக்க ஒழுங்காற்று அதிகார சபையுடன் நடத்தியது. பீடைநாசினி தொழில்நுட்ப ஆலோசனை குழுவின் 2018.12.27 ஆம் திகதிய 95 ஆவது கூட்டத்தொடரில் கட்டாய வேலைகளை தொடர்ந்து மேற்கொள்வதிலுள்ள இடர்பாடுகளுக்கான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பான மேலதிக கலந்தாலோசனைகள் நடாத்தப்பட்டன. இது தொடர்பாக 2018 டிசம்பர் மாதம் தே.ம.ஒ.அ. (NMRA) சபையிடமிருந்து வைத்தியசாலை தொற்றுநீக்கி தொடர்பான குறிப்பிட்ட பிரேரணைகள் மற்றும் ஏதுவானதும் பொருந்தக்கூடியவையுமான சிபாரிசுகள் தொடர்பான அவதானிப்புக்களுக்கான வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன.

## MCPA 40% SL இற்கான பதிவு இரத்து

நெல்லில் MCPA யின் குறைவான சாமர்த்தியத்தன்மை தொடர்பான முறைப்பாடுகளைத் தொடர்ந்து பீடைநாசினி தொழில்நுட்பக் குழுவானது MCPA 40% பதிவினை ரத்து செய்வதற்கான அனுமதியை 2018 ஒக்டோபர் மாதம் வழங்கியது. களத்தில் MCPA யின் தொழிற்பாடு சாமர்த்தியம்

குறைவான நிலைமை விவசாயிகள் மற்றும் ஆராய்ச்சி அலுவலர்களுக்கும் ஒரு குழப்பமான நிலையைத் தோற்றுவித்தது. ஒரே பிரயோகத்தில் இரு வேறு செறிவுகளைக் கொண்ட சேர்மானங்கள் தற்போது விவசாயிகளினால் பிரயோகம் செய்யப்படுகின்ற சிபாரிசு செய்யப்பட்ட சரியான பாவனை முறைக்கு தெரியாததன் பீதியான நிலைமையைப் பற்றி கலந்தாலோசித்தனர். பீடைநாசினி பதிவாளர் அலுவலகம் சில்லறை விற்பனை நிலையங்களில் கிடைக்கின்ற MCPA உற்பத்திகளின் விவசாயிகளின் களங்களிலிருந்து பெறப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாதிரிகளைப் பரிசீலனை செய்தபோது MCPA யின் தொழிற்படு சேர்மானமானவை உணவு விவசாய நிறுவனத்தினால் பிரகடனம் செய்யப்பட்ட அளவினை விட கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உதாரணமாக MCPA 60% (W/V) 58% (W/V) இனை விடவும் குறைவாக காணப்பட முடியாத அதேவேளை MCPA 40% (W/V) எனும் சேர்மானமானது 38.4% (W/V) இனை விடவும் குறைவாகக் காணப்பட முடியாது. (இப்பரிசோதனை அறிக்கைகள் M/s பியூரோ வெரிடாஸ் ( ISO 17025 தகுதியுடைய ஆய்வுகூடம்) இனால் தயாரிக்கப்பட்டன. கையிருப்பிலுள்ள MCPA 40% SL தொகை முடியும் வரை ஆகக் கூடுதலாக 6 மாதங்கள் அவகாசமளிக்கப்பட்டது. இருப்பினும் MCPA 60% சேர்மானங்களை சந்தைப் படுத்துவதற்காக பீடைநாசினி கம்பனிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

## குளுபோசினேற் அமோனியத்தின் புணருத்தானம் - தொடுகை களைநாசினி

விவசாயத் துறையில் ( பெருந்தோட்ட விவசாயத் துறை உள்ளடங்கலாக) அதன் உற்பத்தி அதிகரிப்பில் மனித, இயந்திர சாமர்த்தியமான பயன்பாடு, ஏனைய உள்ளீடுகளை அதிகரித்தல் தொடர்பான களைநாசினிகளின் பங்களிப்பானது இலங்கையில் இறக்குமதி செய்யப்படுகின்ற பீடைநாசினிகளில் ( மொத்த இறக்குமதியின் 48% மானவை, 2017 டிசம்பர்) பெரும்பாலானவை களைநாசினிகள் என்பது யாவரும் அறிந்தே. இது தொடர்பாக 2018.08.31 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 93 ஆவது கூட்டத்தொடரில் ஏனைய பயிர்ச்செய்கையில் களைக் கட்டுப்பாட்டிற்காக) குளுபோசினேற் அமோனியத்தை அடிப்படையாக கொண்ட களைநாசினிகளை புணருத்தானம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. நாட்டின் முற்று முழுதான களைக் கட்டுப்பாட்டிற்காக தனித்த அல்லது குறுகிய அளவிலான களைநாசினிகளில் தொடர்ச்சியாகத் தங்கியிருப்பது களைநாசினிகளுக்கான சகிப்புத் தன்மையை விருத்தி செய்யும் ஒரு நிலையைத் தோற்றுவிக்கும் எனக் குழு மீளாய்வு செய்தது. மேற்கூறிய தீர்மானமானது, 2018.05.08 ஆம் திகதியிடப்பட்ட18/0925/801/004 எனும் இலக்கத்தைக் கொண்ட அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதுடன் கிளைபோசேட் இற்குப் பதிலான மாற்றுக் களைநாசினிகளுக்கான தீர்வை கண்டுபிடிக்குமாறு வலியுறுத்தப்பட்டதன் விளைவாக குழுவானது குளுபோசினேட் அமோனியமே சரியான தீர்வு என முடிவு செய்தது.

மேற்கூறப்பட்ட நிலைமைகளின் கீழ் குழுவினால் பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

1. புணருத்தாரன லைப்லைன் ® (28% W/V குளுபோசினேற் அமோனியத்தைக் கொண்ட) உ.சு.நி. (W.H.O.) தீங்கு வகுப்பு III இன் கீழ் வகைப்படுத்தப்படும்.
2. பஸ்டா ® (15% W/V குளுபேசினேட் அமோனியத்தைக் கொண்ட) உ.சு.நி. தீங்கு வகுப்பு II இனைச் சார்ந்ததன் பிரயோகத் தடை

## லைப்லைன் ® குளுபோசினேட் அமோனியம் 280 கி/லீ SL இற்கான புதிய அறிவுறுத்தல்கள்

அண்மையில் 2018.12.27 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 95 ஆவது கூட்டத்தொடரில் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அலுவலர்கள், சில பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் தேயிலைச் செய்கையாளர்கள் லைப்லைன் ® குளுபோசினேட் அமோனியத்தின் 280 கி/லீ SL இனை தேயிலைச் செய்கையில் பிரயோகிப்பதாகவும், அதன் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீந்து நிற்கும் அளவின் எதிரொலியானது சர்வதேச தேயிலை வர்த்தகத்தில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தலாம் என்ற கருத்தினை கவனத்திற்குக் கொண்டு வந்தனர். பீடெக்கின் ஆலோசனைப் பிரகாரம் பீடைநாசினி பதிவாளர் அதன் பீடைநாசினி பதிவு அதன் சுட்டிகளில் அவசிய அறிவுறுத்தல்கள் அடக்கப்பட வேண்டும் என்ற திருத்தங்களைச் செய்யுமாறு உடன் நடவடிக்கை மேற்கொண்டது.

## போட்டியாளர் உற்பத்திகளிற்கு இடையேயான சிபாரிசினை பொருந்துமாறு செய்தல்

ஒரே வகையான பயிர்/ பீடைகளுக்கு போட்டியாளர் உற்பத்திகளில் அதிஉயர் வீதத்திலான பிரயோகம் அதற்கான சிபாரிசினை நிரோதிக்கக் கூடியதென்ற விஞ்ஞான அடிப்படையிலான பீடெக்கின் உடன்படிக்கையைத் தழுவியே பீடைநாசினி பதிவாளர் பிரேரணையும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பீடெக்கில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் போது குழுவானது ஒரே பிரயோகத்தில் உயர் அளவுகளிற்கான சிபாரிசினைப் பற்றிய கருத்துக்களை வெளியிட்டது. ஒரே உற்பத்தியின் வெவ்வேறு வகைகளுக்கு களத்தில் வெவ்வேறு வீதங்களை சிபாரிசு செய்வது மீண்டுவரும் ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. உதாரணமாக பிஸ்பைரிபேக் - சோடியம் 10% SC Vs 20% WP, பப்ரோபெஸின் 10% WP Vs பப்ரோபெஸின் 25% SC Vs, பப்ரோபெஸின் 40% SC; சைஹெலோபொப் - பியூடைல் 10% EC Vs சைஹெலோபொப் - பியூடைல் 20% EC போன்றவை இலங்கையில் சல்போனைல் யூரியா/ALS திரோதிப்பு களைநாசினி பதிவினைப் பற்றிய அண்மைக்கால மீளாய்வுகள் மிஸ்பைரிபெக் சோடியம் 10% SC Vs 20% WP இன் குறிப்பிடத்தக்க பொருத்தமற்ற சிபாரிசுகள் இருப்பது தெரிய வந்தன. விவசாயிகளின் நலன்கருதி பீ.நா.ப. இந்நிலையை விருத்திசெய்து இணக்கப்பாடான ஒரு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, விடய ஒழுக்காற்றும் விஞ்ஞானிகள் மற்றும் உற்பத்தி பதிவினருடனும் மேற்கொண்டு வருகிறது.

## லோயன்ட் ® களைநாசினியின் (ப்ளோபைரொக்ஸிபென்-பென்ஸைல் 2.5% EC கள முறைப்பாடு

மேற்கூறப்பட்ட களைநாசினி தொடர்பான விரிவான கள முறைப்பாடுகளின் எட்டல்கள் மற்றும் நோக்கங்களைத் தொடர்ந்து விவசாய பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைகளிற்கிணங்க பீ.நா.பதிவாளர் அனைத்து பதிவு செய்யப்பட்டோருக்கும் (M/s க்ரொப் காட் பிரைவேட் லிமிடட்) உடனடியாக விவசாயிகளுக்கான ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொதியினை அறிமுகம் செய்யும் வரையில், சந்தையில் காணப்படுகின்ற அனைத்து லோயன்ட் ® களைநாசினி ( ப்ளோபைரொக்ஸிபென்-பென்ஸைல் 2.5% கையிருப்புக்களையும் மீளப்பெறுமாறு கேட்டுக்கொண்டது. விவசாயிகளுக்கு அவசியமான அறிவுறுத்தல்கள் பிரேரிக்கப்பட்டு அடுத்த உற்பத்தியானது சந்தைக்கு விடுவிக்கப்படுமுன்னர் அவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

### ப்ரொபெனோபொஸ் 50% EC மீதான புதிய தீர்மானம்

க்ரொப் லைப், சிறி லங்காவினால் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கருத்துக்களுக்கமைவாக 2018.04.27 ஆம் திகதி நடத்தப்பட்ட பீடெக்கின் 91 ஆவது கூட்டத்தொடரில் ப்ரொபெனோபெஸ் 50% EC மீதான கட்டுப்பாடுகள் ( பீடெக்கின் 2017.12.29 ஆம் திகதி நடைபெற்ற 89 ஆவது கூட்டத்தொடரில்) மீதான மீள்பரிசீலனை செய்யப்பட்டு உடன் அமுல்படுத்தும் வகையில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

i. தொடர்ச்சியான கடந்த 6 வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்ட வருடாந்த ப்ரொபெனோபொஸ் EC யின் சராசரி பெறுமானமான 203 கிலோ லீற்றர் பெறுமானம் 75% மாக மீள் சரி செய்யப்பட்டது.

ii. ப்ரொபெனோபொஸ் 50% EC உற்பத்தி சுட்டிகளில் பின்வரும் திருத்தம் செய்யப்பட்ட சிபாரிசுகளை உள்ளடக்குவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

- கோல் ஈ - குக்கற்பிற்றுக்கள்
- மிளகாய் - இலைச் சுருளல் தொகுதியான வெண் ஈ, அழுக்கணவன் மற்றும் திரிப்ஸ்
- வெண் பனிப் பூச்சி ( தாவரத்தை அமிழ்த்தும் சிகிச்சை) - அன்னாசி

### பீடைநாசினிகளின் அதிகாரபூர்வ கூட்டுத்தொகுதிகள் ( எஜுவன்ஸ்) பற்றிய மீளாய்வு

தாவர பாதுகாப்பு உற்பத்திகளில் சைலீனை உபயோகித்தல் தொடர்பான தொழிற்றுறை பீதி மற்றும் சர்வதேச நிலைமைகளை அடிப்படைச் சான்றாகக் கொண்டு பீடைகளானது சைலீனை கூட்டுத்தொகுதியில் ( கரைப்பானாக) கொண்ட அனைத்து பீடைநாசினித் தொகுதிகளையும் மீள்பதிவு செய்யத் தீர்மானித்தது. இதன் விளைவாக சைலீனை கூட்டுத்தொகுதியில் கொண்ட பீடைநாசினி வாய்ப்பாடுகளான ப்ரொபனில் 23% + ஒக்ஸாடியேஸின் 8% EC ( பரீட்சார்த்தி பீடைநாசினி) மற்றும் இரு அபெமெக்டின் 1.8% EC சேர்மானங்களான ( பதிவு செய்யப்பட்ட) மீண்டும் 1 வருட கால அவகாசத்துடன் மீள்பதிவு செய்யப்பட்டாலும் சைலீனைக் கொண்ட இப்பீடைநாசினிகள் இக்கெடுகாலத்தின் பின் இலங்கையில் சந்தைப்படுத்தப்பட அனுமதிக்கப்படமாட்டாது. சைலீனுக்காகப் பிரேரிக்கப்படுகின்ற மாற்றீட்டுப் பீடைநாசினிகள் உயிரியல் சாமர்த்தியத் தன்மைக்கான சாதாரண வழிமுறைகளுக்கேற்ப பதிவு செய்யப்படல் வேண்டும்.

### பீடை நாசினி பதிவு முன்னேற்றங்களை ஒழுங்கு படுத்துதல்

பீடைநாசினி பதிவு விண்ணப்பங்களிற்கான சேவைகளை சாமர்த்தியமாகவும் உரிய காலத்தில் பெற்றுக் கொடுப்பதற்காகவும் வேண்டி 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பீ.நா.ப. தேக்கமடையும் விண்ணப்பங்களை முன்னேற்றல் செய்யுமுகமாக ஒரு தெளிவான ஒழுங்கு முறையை பிரகடனஞ் செய்தது. 2018.10.10 ஆம் திகதிய பீடெக்கின் 94 ஆவது கூட்டத்தொடரில் வழங்கப்பட்ட ஆலோசனைகளுக்கிணங்க, இவ்விண்ணப்ப ஒழுங்குபடுத்தல் நடவடிக்கையின் போது சில விண்ணப்பங்கள் வீரியமான முகாமைத்துவத்திற்கான விசித்திரமான அதன் தொழிற்படு தன்மை, தேசிய தேவை மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் முன்னுரிமை பெற்றன. அவையாவன; விவசாய/ பொதுவான பீடைநாசினிகளுக்கான 19 விண்ணப்பங்கள், பின்வரும் மூலக்கூறுகள் அதி முன்னுரிமை பெற்றன. அவையாவன, குளுபோசினேற் அமோனியம் 15% SL, ப் ளோபைரம் 40% SC மற்றும் அசடிராக்டின் 1% EC. அதேநேரம் வீட்டுபயோக/ பொது சுகாதார/ கைத்தொழில் பீடைநாசினிகளுக்குரிய 07 விண்ணப்பங்கள் அதி முன்னுரிமை பெற்றன. அவையாவன,

பொஸ்பீன் 2% + காபனீரொக்சைட் 98%. GA. எஸ்பென்வெலரேட் 5% SL மற்றும் கொகோபுரோபலீன் டயமீன் 20% SL.

## 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் புதிய ஒழுங்கு விதிகள்

2018 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய ஒழுங்கு விதிகள் வெளியிடப்பட்டன. 2018.07.11 ஆம் திகதியிடப்பட்ட 2079/37 இலக்கத்தைக் கொண்ட மேலதிக அரச வர்த்தமானி - கிளைபோசேட் தடையினை இரத்துச் செய்தல்.

- 2018.07.11 ஆம் திகதியிடப்பட்ட 2079/38 எனும் இலக்கத்தைக் கொண்ட மேலதிக அரச வர்த்தமானி - குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் பதுளை மாவட்டத்தின் கந்தகெட்டிய, ரிதிமாலியத்த, மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் கிளைபோசேட் தடையை இரத்துச் செய்தல்.
- 2018.09.13 ஆம் திகதிய 2088/57 இலக்கத்தைக் கொண்ட மேலதிக அரச வர்த்தமானி - கிளைபோசேட்டினைப் பதிவு செய்தல்.
- 2018.10.02 ஆம் திகதிய 2091/13 இலக்கத்தை கொண்ட மேலதிக அரச வர்த்தமானி - தேயிலை மற்றும் இரப்பர் பெருந்தோட்டங்களில் கட்டுப்பாடான முறையில் கிளைபோசேட் மற்றும் சேர்மானங்களில் பொலி ஒக்ஸி எதிலீன் அமைன் (POEA) கிளைபோசேட் மேற்பரப்பாக்கி தடை.

## புதிய ஒழுங்கு விதிகளுக்கான பிரேரணைகள்

## சைக்ரோமேசினுக்கான தடையை நீக்குதல்

பசளையில் ஈக்களின் குடம்பிகளைக் கட்டுப்படுத்தல், மிருகங்களுக்கான பண்ணைகள் ( கால்நடை, பன்றி, கோழி) கழிவுகளைச் சேகரிக்கும் பகுதிகளில் “மட்டுப்படுத்தப்பட்ட” வகை கொம்போஸ்ற் உற்பத்தி செய்யுமிடங்கள் போன்றவற்றில் சைக்ரோமேஸினின் பிரயோகம் தொடர்பான அண்மைக்கால விஞ்ஞான மீளாய்வுப் பிரசுரங்களைத் தழுவி 2018.08.31 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 93 ஆவது கூட்டத்தொடரில் சைக்ரோமேஸின் தடையை இரத்துச் செய்வதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. 2014.03.21 ஆம் திகதிய 1854/47 எனும் இலக்கத்தைக் கொண்ட மேலதிக அரச வர்த்தமானியை இரத்துச் செய்வதற்கான வரைபாக்கம் செய்யப்பட்ட பிரேரணையானது அவசியமான சட்ட நடவடிக்கைகளை பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு 2018 செப்டெம்பர் மாதம் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது.

## பீடெக்கின் விதிகள் (2 ஆம் மீளாய்வு)

2018.12.27 ஆம் திகதி கொழும்பு விவசாய அமைச்சில் நடாத்தப்பட்ட பீடெக்கின் 93 ஆவது கூட்டத்தொடரில் கலந்துரையாடுவதற்காக பீ.நா.ப. “1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 5(2) இன் கீழ் விவசாய அமைச்சரினால் செய்யப்பட்டுள்ளதும் பீடைநாசினி தொழில்நுட்ப குழுவின் அங்கீகாரத்திற்குரித்தானதுமான விதிகள்” எனும் தலைப்பிலான ஆவணத்தை கையளித்தது. 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 5(2) பிரிவின் கீழ் விவசாய அமைச்சரினால் உடன்பாடு செய்யப்பட்டிருந்த, 2017 பெப்ரவரி 23 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 84 ஆவது கூட்டத்தொடரில் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்த 16 விடயங்களுக்கான விதிகளைக் காரணங்காட்டி அங்கீகாரம் அளிக்கப்பட்டது. வரைபாக்கஞ் செய்யப்பட்ட 2 ஆம் மீளாய்வானது விவசாய அமைச்சரின் சட்ட அங்கீகாரத்தினை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திற்குக் கையளிக்கப்பட்டது.

### பிரிவு 20 உடன் சேர்த்து வாசிப்பதற்காக பிரிவு 26 இன் கீழ் செய்யப்பட்ட ஒழுங்கு விதிகள் (சட்ட அங்கீகாரம் பெற்ற ஆகக்கூடிய மீந்து நிற்கும் எல்லையும் அறுவடைக்கு முன்னான கால இடைவேளையும்)

மேற்கூறப்பட்ட ஒழுங்குவிதிகளின், பயிர் மற்றும் பீடைநாசினி தொழிற்படு தொகுதி சட்ட அங்கீகாரம் பெற்ற ஆகக்கூடிய மீந்து நிற்கும் அளவு மற்றும் அறுவடைக்கு முன்னான கால இடைவேளை தொடர்பான (4) ஆம் பந்தியை ஒழுங்கு முறைப்படி பொருந்தும்படி செய்வதற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளுக்காக வரைபாக்கஞ் செய்யப்பட்ட ஒழுங்குவிதிகள் 2018 ஜூலை மாதம் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு மீள் கையளிப்புச் செய்யப்பட்டது.

### தேயிலை மற்றும் இரப்பர் பெருந்தோட்டச் செய்கைக்காக கிளைபோசேட் ( அமில சமநிலையாக்கி) 36% W/V சேர்மானத்தினைப் பதிவு செய்தல்

நீங்கள் அறிந்திருப்பது போல் ஜனாதிபதி செயலாளரினால் நியமிக்கப்பட்ட விற்பன்னர்களைக் கொண்ட இலங்கையில் கிளைபோசேட்டின் பிரயோகம் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களைப் பற்றிய சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் குழுவானது, கடுமையான ஒழுங்குவிதிகளைக் கொண்ட நாடுகளில் துணையான சேர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டு பிரயோகிக்கப் படுகின்றனவா என ஆராய்ந்தறியுமாறு சிபாரிசு செய்தது. மேற்கூறிய வழிகாட்டலின் படி 2018.05.08 ஆம் திகதிய அமைச்சரவை ஒப்பந்தப்பத்திர இலக்கம் 18/0925/801/004 இற்கிணங்க மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி தேயிலை மற்றும் இரப்பர் பெருந்தோட்டச் செய்கையில் கிளைபோசேட்டினை கட்டுப்பாடான முறையில் பிரயோகிப்பதற்கு மிகப் பொருத்தமான சேர்மானத்தினை தெரிவு செய்வதற்கான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கூறிய மீளாய்வு மற்றும் விரிவான கலந்துரையாடல்களைத் தழுவி 2018.06.20 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 92 ஆவது கூட்டத்தொடரில் அனைத்து வகை கிளைபோசேட் சேர்மானங்களும் (36% W/V கிளைபோசேட் அமில சமனிலையாக்கி) சுருக்கச் சேவை பதிவிலக்கம் 61791-26-2 கொண்ட பொலி ஒக்ஸி எதிலீன் அமைனை துணை சேர்மானமானமாக கொண்டிராதவையாக இருத்தல் வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

### 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பைபிலெக்ஸ் ® பைபென்த்ரின் (ப.இல. B32) உற்பத்திக்கான அனுமதிப்பத்திரம், பீடைக் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரம் RP/PCS/WP/015 என்பவற்றைப் பங்கப்படுத்தல். எம்/எஸ் லங்கெம் சிலோன் பீஎல்சீ

எம்/எஸ் லங்கெம் சிலோன் பீஎல்சீ மற்றும் அதன் துணையான லங்கெம் பீடை முகாமைத்துவ பகுதி என்பவற்றின் சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் தொடர்பாக 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பெறப்பட்ட கள முறைப்பாடுகளைத் தொடர்ந்து பீ.நா.ப. ஆரம்ப விசாரணை மேற்கொண்டு மேற்கூறப்பட்ட நிலைமை சம்பந்தமான உண்மைகளை வெளியிட்டது.

1. கலக்கும் உரிமை இந்தியாவைச் சேர்ந்த யூபீஎல் லிமிடெட்டிற்கு உரித்தானதும், 2018.10.16 ஆம் திகதி (500 லீ) மற்றும் 2018.10.29 (1000 லீ) ஆகிய திகதிகளில் எம்/எஸ் சீஐசீ ஹோல்டிங்ஸ் பீஎல்சீ எனும் நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பைசெக்ட் பிபென்த்ரின் ப.இல. கே. 690 100 இனைக் கொண்ட 4 லீ தொகுதியை கலக்கும் உரிமை எம்/எஸ் எப்எம்சீ கோபரேசன், அமெரிக்காவிற்குரித்தான பைபிளெக்ஸ்® பிபென்த்ரின் ( ப.இல. B32) இன் கீழ்

பதியப்பட்ட 1 லீ பொதிகளாக பொதி செய்தமை 2016.07.27 ஆம் திகதி எம்எஸ் லங்கெம் சிலோன் பீஎல்சீ யிற்கு விநியோகம் செய்யப்பட்ட பைபிலெக்ஸ் ® பிபென்திரின் ( ப.இல - B32) இற்கான உரிமைப் பத்திரத்திற்கான நிபந்தனைகளுக்கு பங்கம் விளைவித்தமையாகும்.

2. எம்/எஸ் லங்கெம் பீடை முகாமைத்துவ பகுதியானது சட்ட விரோதமான முறையில் பொதி செய்யப்பட்ட பைபிலெக்ஸ் ® பிபெத்ரின் ( ப.இல. – B32) னை கட்டமைப்பு கறையான் பரிகரணத் திட்டங்களில் பிரயோகம் செய்தமை RP/PCS/WP/015 எனும் அனுமதிப்பத்திர நிபந்தனைகளை மீறியதுடன் 2010.05.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட மேலதிக அரச வர்த்தமானியின் இல 1655/7 இன் பிரிவு 8/(அ)(ஆ) மற்றும் ( இ) இன் மூலம் அங்கீகாரம் பெற்ற ஒழுங்கு விதிகளை மீறியமையாகும்.

பங்கம் விளைவிப்பு அறிவிப்பின் மேலதிக தெளிவுபடுத்தல்களுக்காக ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் எப்எம்சி கோபரேசனின் உதவி கோரப்பட்டது.

## அதிகாரபூர்வமற்ற பெருந்தொகை விற்பனையும் தரம் குறைந்த எம்சீபீஏ உற்பத்திகளும் களத்தில் கண்டுபிடிக்கப்பட்டமை

எம்எஸ் ஹேலீஸ் எக்ரிகல்சர் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தினால் முறைப்படுத்தல் செய்யப்பட்ட எம்சீபீஏ 60% உற்பத்திகளை அதிகாரபூர்வமற்ற தரப்பினருக்கு 2015 - 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பெருந்தொகையில் விநியோகம் செய்து பீடைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக அந்நிறுவனம் கடுமையாக எச்சரிக்கப்பட்டது. இவ்விசாரணைக்கொப்பாகக் களத்திலிருந்து பெறப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான உள்ளூரில் முறைப்படுத்தல் செய்யப்பட்ட கள மாதிரிகளில் உள்ளடக்கப்பட்டிருந்த தொழிற்படு தொகுதிகளில் குறிப்பிடத்தக்க அளவு விலகல் காணப்படுவது ( எப்ஏஓ வின் தாங்கக்கூடிய மட்டத்திற்கு எதிரான) நிதர்சனமாகியது. 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 93 ஆவது கூட்டத்தொடரில் மேற்கூறப்பட்ட நிலை கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்நிலைமையானது நெற்செய்கை களங்களில் எம்சீபீஏயின் மந்தமான செயற்பாட்டின் காரணமாக ஏற்படுத்தப்பட்ட குழப்ப நிலைக்கு உடன் நிகழ்ந்தாற்போல் விவசாயிகளும் ஆராய்ச்சியாளர்களும் பாத்தியதை கோரினர். எனவே கோரப்பட்ட உடன்படிக்கைக்கிணங்க எழுத்துமூல எச்சரிக்கை மேற்கூறப்பட்ட தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டது.

## கால்நடை பீடைநாசினிகளின் சட்டவிரோத இறக்குமதி, பகிர்ந்தளிப்பு, விநியோகம் மற்றும் பாவனை: எம்/எஸ் கென்டோவெட் பார்மஸியூடிகல் (பிரைவேட்) லிமிடட்

களத்திலிருந்து பெறப்பட்ட முறைப்பாடுகளுக்கிணங்க 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் பதிவினைப் பெறாத கால்நடைகளில் பாவிக்கப்படும் பீடைநாசினிகளான எப்ஜபீ டொக்ஸ் ® விசிறுகை, ஹான்டொக்ஸ் ® விசிறுகை மற்றும் ஹான்டொக்ஸ் ® ஷாம்பூ போன்றவற்றை இறக்குமதி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செய்த குற்றத்திற்காக எம்/எஸ் கென்டோவெட் பார்மஸியூடிகல் பிரைவேட் லிமிட்டெடிற்கு எழுத்துமூல எச்சரிக்கை விடுக்கப்பட்டது. பொதுமக்கள் மற்றும் கால்நடை வைத்தியர்களுக்கும் விழிப்பூட்டும் ஆலோசனை நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டு பகிர்ந்தளிப்புச் செய்யப்பட்டது. கால்நடை மருத்துவ கட்டுப்பாட்டு அதிகாரசபை (VDCA) யானது அதற்குரித்தான பிரிவினுள் சட்டவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி நேர்வழிப்படுத்தும் ஆரம்ப பங்களிப்பினை ஆற்றும் பூரணப்படுத்தும் அதிகார சபையாக இருப்பதனால் மேற்கூறிய சம்பவம்

தொடர்பாக UDCA யிற்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

## அசிற்றோ குளோர் 84% ஈசீ பதிவினைப் பற்றிய தீர்மானம்

2018.06.19 ஆம் திகதி நடைபெற்ற விவசாயப் பீடைநாசினி உபகுழுவின் 28 ஆவது கூட்டத்தில் தற்போதைய நிலைமைகளின் கீழ் அசிற்றோகுளோர் 84% ஈசீயின் பயன்பாடு மனித சுகாதாரம் மற்றும் சுற்றாடலில் ஏற்படுத்தும் விளைவு பற்றிய மீளாய்வொன்றினை நடாத்தும்படி கேட்டுக்கொண்டது. இது தொடர்பாக அசிற்றோகுளோர் தொடர்பான றொடர்டாம் உடன்படிக்கையின் கீழ் தடைசெய்யப்பட்ட அல்லது கடுமையான கட்டுப்பாடு விதிக்கப்பட்ட இரசாயனங்கள் ( யூஎன்ஈஏபி/ எப்ஏஓ/ ஆர்சீ/ சீஆர்சீ.14/13 வரைபாக்கஞ் செய்யப்பட்ட அசிடோகுளோர் தொடர்பான வழிகாட்டி தஸ்தாவேஜு) தொடர்பாக ஏற்கனவே அறிவிப்புச் செய்து தீர்மானம் செய்யப்பட்ட வழிமுறைகளை உள்ளடக்கிய 2018 செப்டெம்பர் 11 – 14 வரை நடாத்தப்பட்ட இரசாயன மீளாய்வுக் குழுக் கூட்டத்தில் அசிற்றோகுளோர் பாவனை மனித சுகாதாரம் மற்றும் சூழலில் விளைவிக்கும் தாக்கம் பற்றி சமர்ப்பணம் செய்யப்பட்டது. மேற்கூறப்பட்ட மூலக்கூற்றினை ஏற்றுக்கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல்கள் எதிர்வரும் பீடைக் கூட்டத்தொடர்களில் மேற்கொள்ளப்பட்டு இறுதி முடிவு காணப்படும்.

## தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தில் பங்களிப்பு

சுற்றாடல், முகாமைத்துவம் மற்றும் பொதுச் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு பொது இடங்களில் நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக செயற்கை இரசாயனங்களைப் பாவிப்பது சுகாதார, சுதேச வைத்திய அமைச்சின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள ஒரு வழிமுறையாகும். நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் சாதாரண முறையானது பொது இடங்களில் நிறையுடலி நுளம்புகள் உட்பட நுளம்புக் குடம்பிகள் பெருக்கமடையும் ( மீதமுள்ள நீர், காற்றோட்டமுள்ள சதுப்பு நிலங்கள்) இடங்களில் குடம்பிகளையும் கட்டுப்படுத்துவதாகும். சுகாதார அமைச்சின் வேண்டுகோளையும் அதனுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கும் (அதாவது தேசிய டெங்கு ஒழிப்பு அலகு) இணங்க 2017.05.23 ஆம் திகதியிடப்பட்ட ROP/PCS/2017-1 எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பதிவு செய்யப்பட்ட அனைத்து பீடைக்கட்டுப்பாட்டு நிறுவனங்களும் பொது இடங்களில் பெருக்கமடையும் இடங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அதற்கிணங்க கட்டுப்படுத்தப்பட வேண்டிய பொது இடங்களில் பூச்சிநாசினிப் பிரயோகம் அப்பிரதேச பொதுச் சுகாதார அலுவலர்களின் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்படல் வேண்டும் என்ற ஆலோசனை வழங்கப்பட்டது. இதற்கு புறம்பாக 2018.09.05 ஆம் திகதியிடப்பட்ட ROP/PCS/2018-2 மற்றும் 2018.11.02 ஆம் திகதியிடப்பட்ட ROP/PCS/2018/2-1 எனும் இலக்கங்களைக் கொண்ட சுற்றறிக்கைகள் மூலம் நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் உபாய மார்க்கங்களில் குடம்பிகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பாவிக்கப்படுகின்ற இரசாயன குடம்பி நாசினிப் பாவனை குறித்த சில பிரயோகங்களுக்காக பதிவு செய்யப்பட்ட பீடை கட்டுப்படுத்தும் நிறுவனங்களுக்கு தகுந்த ஆலோசனைகளுடன் சுதந்திரமாக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் பீடைக் கட்டுப்பாட்டு நிறுவனங்கள் மற்றும் பொது மக்களால் நுளம்புக் குடம்பிகளைக் கட்டுப்படுத்துவதற்காக பஸிலஸ் துருன்ஜியன்ஸிஸ் உப இனம் இஸ்ரேலியன்ஸிஸ், செரோடைப் H (மொஸ்கிடோ டன்க் ®), பைரிபுரொக்ஸிபென் (சுமிலார்வ் ® 0.5%W/W) பொலிடைமீதைல்சைலொக்சேன் (எருவாட்டின் ® AMF 78%), நோவாலியூரோன் (ரிமோன் ® 10% EC) மற்றும் S-மெதோபிரின்

(வியோபிரென் ® 5% CS) போன்றவை சுதந்திரமான பிரயோகத்திற்காகப் பதிவு செய்யப்பட்டன.

## இரசாயனங்கள் மற்றும் அவற்றின் பக்க விளைவுகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தில் பங்கேற்றல்

ஸ்டொக்ஹோம் ஒப்பந்தமானது தாங்கி நிற்கக்கூடிய சேதன மாசாக்கி இரசாயனங்களின் உற்பத்தி, பாவனை தொடர்பான விடயங்களை விவரிக்கும், சட்ட ரீதியாக பிணைப்பை ஏற்படுத்தும் ஒரு சர்வதேச உடன்படிக்கையாகும். மேற்படி ஒப்பந்தம் தொடர்பான விடயங்களை செயலகத்திற்கு சமர்ப்பிப்பதற்காக பீ.நா.ப. சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து செயற்பட்டது. பீ.நா.ப. பீடை நாசினிகளுடன் சம்பந்தப்பட்டிருப்பதனால் கடமைகளை எதிர்கொள்ளவும் தொடர்ந்து வரும் ஸ்டொக்ஹோம் மாநாடுகளில் பங்கேற்கவும் வடிவமைக்கப்பட்ட சர்வதேச அதிகார சபையாகும். ( டீஎன்ஏ) மனித சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடலை நோக்காகக்கொண்டு றொடர்டாம் உடன்படிக்கையானது தகவல் பரிமாற்றத்தை தரமுயர்த்துவதுடன் சர்வதேச இரசாயன வர்த்தக இணக்கப்பாட்டினை அறிவிப்புச் செய்கின்றது. இலங்கையானது இவ் உடன்படிக்கையின் ஒரு தரப்பாகும். மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் இணைந்து பீ.நா.ப. இம்மாநாட்டில் இலங்கையின் நிலையை அபிவிருத்தி செய்யவும் சமர்ப்பிக்கவும் இம்மாநாட்டில் கலந்துகொண்டது. 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் றொடர்டாம் உடன்படிக்கையின் பீடைநாசினி முகாமைத்துவ ஆலோசனை மலேசியாவைச் சேர்ந்த திரு ஹலீமி மஹ்மூத் இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் றொடர்டாம் உடன்படிக்கையினை அமுலாக்கல் செய்வதற்குரிய கடமைகளை மேலும் வலுவூட்டவும் தெளிவாக்குவதற்குமான விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவதற்காக இலங்கைக்கு சமூகமளித்தார். கலந்தாலோசனைப் பிரகாரம் றொடர்டாம் உடன்படிக்கையின் கீழ் இறக்குமதி பொறுப்புக்களை கையளித்தல் (ஐஆர்), இறுதி ஒழுங்காற்றல் நடவடிக்கைகள் ( எப்ஆர்ஏ) தொடர்பான ஆவணங்கள் பற்றிய புரிந்துணர்வு குறிப்பிடத்தக்க அளவில் விருத்தி அடைந்தது. பீ.நா.ப. 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பீடை நாசினிகள் தொடர்பில் உடன்படிக்கைக்குரிய கடமைகள் பீடைநாசினியின் குறித்த நோக்கத்தினை உறுதிசெய்தல் மற்றும் பீடைநாசினி வீண்விரய முகாமைத்துவம் தொடர்பான இலங்கையின் கடமைகளை தொடர்ந்து நிர்வகித்து வருகிறது.

- றொடர்டாம் உடன்படிக்கையின் கடமைகளை பூர்த்தி செய்யுமுகமாக 2018 ஜனவரி 25 ஆம் திகதி குளோரோபைரிபொஸ் தொடர்பான இறுதி ஒழுங்காற்று நடவடிக்கைகள் றொடர்டாம் செயலகத்திற்குக் கையளிக்கப்பட்டது.

- றொடர்டாம் உடன்படிக்கையின் கடமைகளைப் பூர்த்தி செய்யுமுகமாக றொடர்டாம் உடன்படிக்கையின் அதி தீங்கு பயக்கக்கூடியதென நிரற்படுத்தப்பட்டதும் சட்ட ரீதியாக இலங்கையில் தடை செய்யப்பட்டவையுமான 21 இறக்குமதி பொறுப்புக்கள் பீடைநாசினிகள்/ சேர்மானங்கள் ( அலக்லோர், காபோபியூரான், பென்தியோன், அஸின்பொஸ்-மீதைல்) றொடர்டாம் செயலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. பீ.நா.ப. அலுவலகமானது இரசாயனம்/ பீடைநாசினி மற்றும் இரசாயனங்கள் தொடர்பான பிரச்சினைகளை மீளாய்வு செய்யும், தீர்வுகளை விருத்திசெய்யும் விற்பன்னராக சேவை புரிந்து வருகிறது. இலங்கையானது றொடர்டாம், ஸ்டொக்ஹோம் மற்றும் பேஸல் உடன்படிக்கைகளின் ஒரு தரப்பாக பங்காற்றுகின்றது. இம்மூன்று உடன் படிக்கையின் கீழும்

முகவர்களிற்கிடையிலான பொறுப்புக்களை தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் அலுவலக பிரதிநிதிகளாக (என்.சீ.சீ.பீ.ஆர்.எஸ்.எம் மகாவலி) ஆற்றி வருகின்றது.

சர்வதேச ரீதியில் கையாள்வதற்கான தொழில்நுட்ப வழிகாட்டிகளை விருத்திசெய்வதற்கான வேலைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன. கூட்டத்தொடர்கள் சர்வதேச ரீதியில் இரசாயனக் கழிவுகள் பற்றிய வழிகாட்டிகளை மீளாய்வு செய்யும் தொழில்நுட்ப ஒன்றுகூடலாக பங்காற்றுகின்றன. பீ.நா.ப. அலுவலகமானது 2018 ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் 2018 ஒக்டோபர் 5 ஆம் திகதி வரை சுவிற்சலாந்து, ஜெனிவாவில் இடம்பெற்ற பீஓபீ கழிவுகள் பேஸல் மற்றும் ஸ்டொக்ஹோமில் இடம்பெற்ற சிறிய கூட்டத்தொடர்களிற்கிடையிலான வேலைக்குழுவில் பங்காற்றியது. அத்துடன் பீஜிங், சீனாவில் 2018 நவம்பர் 27 ஆம் திகதி முதல் 2018 நவம்பர் 28 ஆம் திகதி வரை இடம்பெற்ற தீங்கு பயக்கும் இரசாயனங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய கழிவுகள் தொடர்பில் துல்லியமான முகாமைத்துவத்திற்கான வாழ்க்கை வட்ட அனுகுமுறை எனும் வட்ட மேசை மாநாட்டிலும் கலந்துகொண்டது.

## களக்கண்காணிப்பும் சட்ட உதவி பகுதியும்

### வினியோக அனுமதிப் பத்திரம் மற்றும் பரிசீலனை தொடர்பான பூரண நிலைமை

குறித்த காரணங்களுக்காக இரத்துச் செய்யப்பட்டாலன்றி வினியோக அனுமதிப்பத்திரங்கள் 1 வருடகாலத்திற்கு செல்லுபடியாகும். 1 வருடகாலத்திற்கு செல்லுபடியாகும் அவ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 1 வருடத்தினுள் புதுப்பிக்கப்படல் வேண்டும். வருடாந்த அனுமதிப்பத்திர வினியோக ஒழுங்காக்கல் நடவடிக்கைகளுக்காக ரூ. 550.00 அறவிடப்படுகின்றது. இப்பிரிவின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த இறைவரியானது ரூ. 725,710.00 ஆகும். அனுமதிக்கப்பட்ட மொத்த வினியோக நிலையங்கள் 1057 ஆகும்.

### பீடைநாசினி வினியோகத் தரவுத்தளம்

2018 ஆம் ஆண்டிற்கான பீடைநாசினி வினியோகத் தரவுத்தளம் பூர்த்தி செய்யப்படுள்ளது. தொகுக்கப்பட்ட நிரலானது அனைத்து மாவட்ட பிரதிப் பணிப்பாளர்களுக்கும் மேலதிக சரிபார்த்தலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அட்டவணை 2.1.3.4 இல் 2018 ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியில் பதிவு செய்யப்பட்டுள்ள பீடைநாசினி விற்பனை நிலையங்கள் தொடர்பான அறிக்கை தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.1.3.4: மாவட்ட ரீதியில் காணப்படுகின்ற பீடைநாசினி விற்பனை நிலையங்களும் 2018.12.31 ஆம் திகதி வரை பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்களும்**

| மாவட்டம் | காணப்படுகின்ற விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்கள் | வளர்ச்சி % |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 57 | 15 | 30 |
| பதுளை | 160 | 73 | 46 |
| மட்டக்களப்பு | 59 | 28 | 47 |

| மாவட்டம் | காணப்படுகின்ற விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 2018 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட விற்பனை நிலையங்கள் | வளர்ச்சி % |
|---|---|---|---|
| கொழும்பு | 61 | 34 | 56 |
| காலி | 162 | 64 | 40 |
| கம்பஹா | 38 | 22 | 58 |
| ஹம்பாந்தோட்டை | சமர்ப்பிக்கப்படவில்லை | 25 | ச. வி. |
| யாழ்ப்பாணம் | 20 | 01 | 05 |
| கண்டி | 107 | 75 | 75 |
| கேகாலை | 71 | 11 | 15 |
| களுத்துறை | சமர்ப்பிக்கப்படவில்லை | 14 | ச. வி. |
| குருநாகல் | 363 | 102 | 28 |
| மொனராகலை | 22 | 17 | 77 |
| மாத்தளை | 47 | 26 | 55 |
| மாத்தறை | 117 | 33 | 28 |
| முல்லைத்தீவு | 26 | 02 | 08 |
| நுவரெலியா | 192 | 72 | 38 |
| புத்தளம் | 122 | 30 | 25 |
| இரத்தினபுரி | 135 | 76 | 56 |
| திருகோணமலை | 35 | 05 | 14 |
| வவுனியா | 35 | 26 | 74 |
| அநுராதபுரம் (I/P) | 72 | 44 | 61 |
| அம்பாறை (I/P) | 99 | 81 | 89 |
| ஹம்பாந்தோட்டை(I/P) | 41 | 16 | 39 |
| கண்டி (I/P) | 57 | 37 | 65 |
| மொனராகலை (I/P) | 21 | 10 | 48 |
| பொலன்னறுவை (I/P) | 53 | 29 | 55 |
| மகாவலி-ஹசருலுவெவ | சமர்ப்பிக்கப்படவில்லை | 01 | ச. வி. |
| மஹாவலி – சீ | 18 | 09 | 50 |
| மஹாவலி – எம்பிலிபிட்டிய | 50 | 44 | 88 |
| மகாவலி - ஜீ | 25 | 06 | 24 |
| மகாவலி – பீ | சமர்ப்பிக்கப்படவில்லை | சமர்ப்பிக்கப்பட வில்லை | ச. வி. |
| மகாவலி - எச் | 29 | 29 | 100 |
| **மொத்தம்** | **2,294** | **1,057** | **46** |

*ச. வி. - சமர்ப்பிக்கப்பட வில்லை

## பீடைநாசினி விநியோக நிலையங்களைப் பரிசோதித்தல்

பீடைநாசினிகளை விற்பனை செய்தல், விற்பனைக்காகப் பெற்றுக்கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளின்போது 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு இவை தொடர்பான ஒழுங்குவிதிகள் மற்றும் உடன்பாடுகளை கண்காணித்தல் கடமையாக்கப்பட்டுள்ளது. பீடைநாசினி விற்பனை மற்றும் விநியோக நடவடிக்கைகள் உடன்பாட்டிற்கேற்ற வகையில் களத்தில் நடைபெறுவதை கண்காணிப்புச்செய்தல், பீநாப வழக்கமான ஒரு நடவடிக்கையாக நடைபெற்று வருகின்றது. பரிசீலிப்பின் தலையாய நோக்கம், பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்துடன் உடன்பாட்டின் அளவை கண்காணிப்பு செய்தலாகும். இதன் பிரகாரம் பீடைநாசினி விற்பனைகளை மேற்கொள்ளும் கடைகளில் 67 உடன்பாட்டுத் தெளிவுபடுத்தல் பரிசீலனை நடவடிக்கைகள் புத்தளம், வவுனியா, கிளிநொச்சி, மாத்தளை, குருநாகல், ( கல்னேவ, புல்னேவ, சேனபுர மற்றும் இபலோகம) நுவரெலியா (ரிகில்லகஸ்கட) போன்ற இடங்களில் நடாத்தப்பட்டன. உடன்பாட்டிற்கு முரணான சில எடுத்துக்காட்டுகளாவன:

i. செல்லுபடியான சான்றிதழ்கள் அற்ற பீடைநாசினி விற்பனை ( பகுதி 21 அ, ஒழுங்கு விதி 1113/15 - 2000.01.05)

ii. விற்பனைச் சான்றிதழைக் காட்சிப்படுத்தாமை ( பகுதி 21 அ(5) ஒழுங்கு விதி 200.01.05 இன் 1113/15)

iii. சட்டவிரோத பீடைநாசினி விற்பனையும் விற்பனைக்காக அளித்தலும் ( பகுதி 9 மற்றும் 15)

iv. நலிவான மற்றும் தீங்கு பயக்கக்கூடிய வகையிலான பீடைநாசினி களஞ்சியப்படுத்தல் நிலைமைகள் (பகுதி 16 மற்றும் 09)

v. பயிற்சியளிக்கப்பட்ட நபர்கள் இல்லாமை (ஒழுங்குவிதி 1716/23 – 2011.07.27)

அவதானிப்புக்கள் தொடர்பான குறிப்புக்களை எடுக்கவும், சுற்றாடல் பாதுகாப்பு, பொது சுகாதாரம் தொடர்பான முன்னுரிமை நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்நிலையைச் சீர்படுத்துவதற்கு அவசியமான திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு வற்புறுத்தல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பீ.நா.ப. "பீடைநாசினி விற்பனை நிலையங்களின் பரிசீலனை அறிக்கை மாதிரி" இனை (படிவம் ஆர்பீ/ஏயூஓ/பொது/01) சுற்றறிக்கையாக களப்பரிசோதகர்களுக்கு அனுப்பி வைத்தது.

## புதிய பீடைக் கட்டுப்பாட்டுச் சேவைகளின் பதிவு

நிறுவனங்களை அனுமதிப்பத்திரமயமாக்கும் மீதியான வேலைத்திட்டமானது முன்னைய அனுமதிப்பத்திரத்திற்கேற்ப தொழில்நுட்பக் கொள்ளளவும், உள்ளகக் கட்டமைப்பும் பயிற்சித் தகைமைகள், உபகரணங்களின் கிடைக்குமளவு என்பவற்றைத் தழுவியுள்ளது. பொதுவான பீடைக்கட்டுப்பாடு, முந்திய/ பிந்திய கட்டட மற்றும் கட்டமைப்புக்களில் கறையான்களை கட்டுப்படுத்தல், முந்திய/ பிந்திய தடுப்புக்காப்பு தூமாக்கல் நடவடிக்கைகளில் கட்டுப்பாடான மற்றும் ஏனைய பீடைநாசினி பிரயோகம் போன்றன விசேட பீடைக் கட்டுப்பாட்டு சேவைகளாகும்.

தகுதி வாய்ந்த பீடைக்கட்டுப்பாட்டு சேவை நிறுவனங்களுக்கு அனுமதிப்பத்திரங்களை விநியோகிக்கு முன்னர் பீடெக்கின் அனுமதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்ற ஒழுங்குவிதிகள் 2010.05.25 ஆம் திகதி 1655/7 எனும் இலக்கத்தைக் கொண்ட மேலதிக அரச வர்த்தமானி மூலம் அறிவிப்புச் செய்யப்பட்டது.

**அட்டவணை 2.1.3.5: 2018 ஆம் ஆண்டில் புதிதாக அனுமதி அளிக்கப்பட்ட பீடைக் கட்டுப்பாட்டுச் சேவை நிறுவனங்கள்**

| கம்பனியின் பெயர் | வகுப்பு |
|---|---|
| ட.ஜே. பெஸ்ட் கொன்ட்ரோல் சேர்விஸஸ் (பிரைவேட் லிமிடெட்) | பொதுவான பீடைக் கட்டுப்பாடு |
| டார்கட் பெஸ்ட் மெனேஜ்மன்ட் ( பிரைவேட் லிமிடெட்) | பொதுவான பீடைக் கட்டுப்பாடு, முன்/பிந்திய கட்டட நிர்மாணப்பணிகள் கட்டமைப்பு பீடைகள்/ கறையான் கட்டுப்பாடு |
| Bபெஸ்ட் Pபெஸ்ட் சொலுசன்ஸ் என்ட் சேர்விஸஸ் | பொதுவான பீடைக் கட்டுப்பாடு, முன்/பிந்திய கட்டட நிர்மாணப்பணிகள் கட்டமைப்பு பீடைகள்/ கறையான் கட்டுப்பாடு |
| பீடைக் கட்டுப்பாட்டு அலகு - பேராதனைப் பல்கலைக் கழகம் | பொதுவான பீடைக் கட்டுப்பாடு, முன்/பிந்திய கட்டட நிர்மாணப்பணிகள் கட்டமைப்பு பீடைகள்/ கறையான் கட்டுப்பாடு |
| டஎன்ஜே டெக்னிகா | பொதுவான பீடைக் கட்டுப்பாடு, முன்/ பிந்திய கட்டட நிர்மாணப்பணிகள் கட்டமைப்பு பீடைகள்/ கறையான் கட்டுப்பாடு |
| கிளியர் பெஸ்ட் கொன்ட்ரோல் என்ட் என்வைரன்மன்ட் சர்விஸஸ் | பொதுவான பீடைக் கட்டுப்பாடு, முன்/பிந்திய கட்டட நிர்மாணப்பணிகள் கட்டமைப்பு பீடைகள்/ கறையான் கட்டுப்பாடு |

## மட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளைக் கொள்வனவு செய்தல், பிரயோகம் செய்தல் போன்ற நடவடிக்கைகளின் போது அவசியமான தகவல்களைப் பேணுதலும் அறிக்கை மயப்படுத்தலும்

பதிவு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளைச் சட்ட ரீதியாகப் பிரயோகம் செய்வதற்கு பீ.நா.ப. அனுமதி அவசியம் என்பதை 2010.05.25 ஆம் திகதிய 1655/7 எனும் இலக்கத்தைக் கொண்ட மேலதிக வர்த்தமானியின் பீடைநாசினிக் கட்டுப்பாடு ( பீடைக்கட்டுப்பாட்டு சேவைகள்) ஒழுங்குவிதி இல {( பகுதி 5 ( ஈ)} தகவல் அறிக்கைப்படுத்தல். {( பகுதி - 6( அ)} கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தற்போது பீ.நா.பதிவாளரினால் நிறுவனங்களின் மூலம் கட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளைக் கொள்வனவு செய்வதற்காக விடுக்கப்படுகின்ற உயர்தர வேண்டுதல்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. இந்நோக்கத்தை அடைவதற்காக 2018 ஆம் ஆண்டில் பீ.நா.ப. அலுவலகமானது மட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக அங்கீகாரமளிக்கப்பட்ட நிறுவனங்கள் பொது மக்களுக்கு பீடை கட்டுப்பாட்டுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு கட்டாய அறிக்கைப் படுத்தல் பொறிமுறையொன்றினை அறிமுகம் செய்தது. 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்

முதல் அனைத்து தகவல்களும் ஒவ்வொரு காலாண்டிலும் மட்டுப்படுத்தப்பட்ட பீடைநாசினிகளின் இறக்குமதி, உயர் தரக் கொள்வனவிற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னர் இரசாயனங்களின் அளவு சமப்படுத்தல்கள் மிகத் துல்லியமாகக் கண்காணிப்புச் செய்யப்படுகின்றன.

## கள ஒழுங்குவிதி பரிசீலனை உபகுழு தொடர்பான உபகுழு

ஒரு புதிய ஆரம்பமாக களத்தில் அமுலாக்கம் செய்யப்படும் நிகழ்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நிகழ்வுகளிற்கிடையிலான இடைவெளியை விபரிப்பதற்காக, 1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (திருத்தம் செய்யப்பட்ட சட்ட 1994 இன் 06 ஆம் இலக்க சட்டம், 2011 இன் 31 ஆம் இலக்க சட்டம்) உப பிரிவு 5(1)( ஆ) இன் கீழ் உப குழுவானது பிரேரணை செய்யப்பட்டது. 2018.04.27 ஆம் திகதி நடைபெற்ற பீடெக்கின் 70 ஆவது கூட்டத்தொடரில் மேற்படி பிரேரணை உத்தியோகபூர்வமற்ற முறையில் அங்கீகாரம் செய்யப்பட்டது. களத்தில் பயனுறுதியான முறையில் சட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்திற்கு அவசியமான சில அல்லது அனைத்து நடவடிக்கைகளையும் பீடெக்கிற்கு சிபாரிசு செய்ய வேண்டியது உப குழுவின் கடமையாகும். விசேடமாக திருத்தம் செய்யப்பட்ட 1994 இன் 06 ஆம் இலக்க சட்டத்திற்கிணங்க ஒவ்வொரு பீடைநாசினி விற்பனையாளரும் பதிவு செய்யப்பட்டு சட்டரீதியான வியாபார நடவடிக்கைகளுக்கான சான்றிதழை வழங்கும் விடயமானது ஏயூஓ வினருக்குப் பொறுப்பாக உள்ளது.

முதல் உபகுழுக் கூட்டமானது, 2018 டிசம்பர் மாதம் 18 ஆம் திகதி கண்ணொறுவையில் அமைந்துள்ள சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்டது. அங்கத்தவர்கள் பிரேரிக்கப்பட்ட உபகுழு மற்றும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடலின் போது உரிய விடயங்களை வரைபாக்கஞ் செய்துகொண்டனர். அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (ஏயூஓ) மற்றும் இலங்கையில் பீடைநாசினி தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட அலுவலர்களின் கள அமுலாக்கல் நடவடிக்கைகளின் குறைந்த முன்னேற்றம் தொடர்பாக சுற்றாடல் மற்றும் பொதுச் சுகாதாரத்திற்கு ஏற்படக்கூடிய குறைகளை நிவர்த்திக்கும் முகமாக நேருக்கு நேர் கேட்கப்பட்டது.

## விவசாய இரசாயனங்களின் விற்பனையும், தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சிகளும் (ஏஎஸ்டீஏ)

2018 ஆம் ஆண்டில்520 பயிற்சியாளர்கள் (ASTA) பயிற்சிகளில் கலந்துகொண்டனர். (அட்டவணை 2.1.3.6) மதிப்பீடு 2019 ஆம் ஆண்டு ஜனவரியில் நடாத்தப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த 37 தமிழ் மொழி மூல பயிற்சியாளர்கள் 2018 செப்டெம்பரில் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டதுடன் அவர்களுள் 35 பேர் சான்றிதழ்களைப் பெறத் தகுதி பெற்றனர். சான்றிதழ்கள் பயிற்சியாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்குமுகமாக வவுனியா பிரதிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**அட்டவணை 2.1.3.6 மாவட்ட ரீதியில் விவசாய இரசாயன விற்பனையும், தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சியும்**

| மாவட்டம் | பயிற்சியாளர்களின் எண். |
|---|---|
| அநுராதபுரம் | 50 |
| அம்பாறை | 180 |
| குருநாகல் | 40 |
| புத்தளம் | 30 |
| மாத்தறை | 60 |
| நுவரெலியா | 60 |
| கண்டி | 60 |
| கம்பஹா | 40 |
| **மொத்தம்** | **520** |

## எஸ்டா(ASTA) பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்

மஹாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிராந்திய எஸ்டா பயிற்சிகளை நடாத்துவதற்கேதுவாக இலங்கை மஹாவலி அதிகார சபையின் 31 அலுவலர்களுக்கு கன்னொறுவையில் அமைந்துள்ள சேவைக் காலப் பயிற்சி நிலையத்தில் ஜூன் 21, 22 ஆகிய திகதிகளில் பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சி நடாத்தப்பட்டது.

## புதிய அலுவலர்கள், சட்ட நடவடிக்கை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கான அலுவலர்களை நியமனம் செய்தல் (வழக்குத் தொடரும் அதிகாரிகள்)

பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தை களத்தில் அமுல்படுத்தும் நடவடிக்கைகளை மேலும் உறுதி செய்வதற்காக 11 புதிய அதிகாரிகள் விவசாயத் திணைக்களத்திலிருந்து 4 பேர், இலங்கை மஹாவலி அதிகார சபையிலிருந்து 7 பேர்) அதிகாரம் பெற்ற அலுவலர்களாக நியமிக்கப்படுவதற்காக விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடம் பிரேரணை செய்யப்பட்டனர். அதே சமயம், பகுதி 24(அ)(1) இன் கீழ் 55 புதிய அலுவலர்கள் வழக்குத் தொடரும் அலுவலர்களாக; 4 பேர் விவசாயத் திணைக்களத்திலிருந்தும் 51 பேர் சுகாதாரத் திணைக்களத்திலிருந்தும் ( உணவு மற்றும் மருந்துவகை பரிசோதகர்) நியமிக்கப்பட்டனர். உணவு மற்றும் மருந்து வகை பரிசோதனைகளுக்கு 2018 ஆகஸ்ட் 9, 10 ஆம் திகதிகளில் கன்னொறுவை உள்ளகப் பயிற்சி நிறுவனத்தில் 02 நாள் பயிற்சி நடாத்தப்பட்டது.

## சட்டவிரோத கிளைபோசேட் இறக்குமதி தொடர்பான சவால்களும் பிரச்சினைகளும்

2015 ஒக்டோபர் ( மேலதிக அரச வர்த்தமானி இல. 1937/35, 2015.10.23 திகதியிடப்பட்ட) மீண்டும் தடைசெய்யப்பட்ட 2018 ஜூலை (மேலதிக அரச வர்த்தமானி இல. 2079/37, 11.07.2018 திகதியிடப்பட்ட) தேயிலை, இறப்பர் பெருந்தோட்டத்துறைக்கு மிகக் கடுமையான கட்டுப்பாட்டின் கீழ் ( மேலதிக அரச வர்த்தமானி இல. 2091/13, 02.10.2018 திகதியிடப்பட்ட கிளைபோசேட்டின் சட்ட விரோத கடத்தல் மற்றும் இறக்குமதி (பிழையான பிரகடனத்தின் கீழ்) அதன் பூரணமான தடைசெய்கையின் பின்னரும் மீண்டு வருகின்ற ஒரு சவாலாக கடந்த வருடங்களில் இருந்து வந்துள்ளது.

2018 ஆம் ஆண்டு தடை செய்யப்பட்ட கிளைபோசேட் விற்பனை மற்றும் கள்ளக் கடத்தல் தொடர்பான சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டோருக்கெதிரான குறிப்பிடத்தக்க அளவில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒரு வருடமாகும். 05 நீதிமன்ற நடவடிக்கைகள் சட்ட விரோத கிளைபோசேட்டிற்கெதிராக மேற்கொள்ளப்பட்டன. ( உரு - 1) பின்வரும் எடுத்துக் காட்டல்கள் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தொகுக்கப்பட்டது ஆகும். 2018 ஆம் ஆண்டில் பீ.நா.ப. தனிநபர் அல்லது எஸ்டீஎப் ( செட்டிகுளம் முகாம்) இனருடன் சேர்ந்தோ மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் சுருக்கமாகும். (அட்டவணை. 4) பீ.நா.ப. அலுவலகமானது விசேட அதிரடிப் படையிடருன் இணைந்து கூட்டாக சட்டவிரோத பீடைநாசினிகளைக் கண்டுபிடித்தல், நீதிமன்றத்தில் கோவை செய்தல், விசாரணைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளுக்கு உந்துதலாக அமைந்தது. உதாரணமாக 2017.12.05 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் செட்டிக்குளம் அதிரடிப்படை முகாம் சட்டவிரோத கிளைபோசேட் தொடர்பான 08 நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது.

நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகளின் இறுதியில் குற்றவாளியாகக் காணப்பட்ட 4 பேருக்கு ரூ. 300,000.00 வீதம் தண்டப்பணம் செலுத்துமாறு 2018 டிசம்பர் மாதம் தீர்மானித்தது.

**அட்டவணை 2.1.3.7: சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளும் நடைமுறைகளும்**

| இல | திகதி | இடம் |
|---|---|---|
| 01 | 05.12.2017 | நசீர் டிரேடிங், இக்கிரிகொல்லேவ |
| 02 | 13.05.2018 | அலிஸ்தானய குருஷி சேவய, திரிப்பனே |
| 03 | 26.05.2018 | இனோகா ஸ்டோர்ஸ், எலபத்துவ |
| 04 | 13.06.2018 | விஜயாஸ் குருஷி சேவய, கெக்கிராவ |
| 05 | 13.05.2018 | லகி குருஷி சேவய, கெக்கிராவ |
| 06 | 25.06.2018 | லங்கா டிரேடர்ஸ், மெதவச்சிய |
| 07 | 24.07.2018 | சமரகோன் குருஷி சேவய, தம்புத்தேகம |
| 08 | 17.10.2018 | ஒஸ்லான் குருஷி வியாபாரம், நொச்சியாகம |
| 09 | 04.05.2018 | பண்டார வெலந்த செல, தம்புத்தேகம |
| 10 | 30.08.2018 | டீ.பீ.எம். முனசிங்க என். ஜீ. விமலசிரி, ஹம்பாந்தோட்டை |
| 11 | 30.08.2018 | துஷார சன்ஜீவ, சேனபுர |
| 12 | 28.11.2018 | ஐ.எஸ்.எஸ்.எம்.சியாம், தம்புள்ளை |
| 13 | 05.12.2018 | கங்கா டிரேடர்ஸ், தம்புள்ளை |

1980 இன் 33 ஆம் இலக்க பீடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் சட்டவிரோத பீடைநாசினி தொடர்பான சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகள் தொடர்பில் அவதானமாக நடந்துகொள்ளுமாறு ஊடகங்கள் மூலம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டது.

களத்திலிருந்து அறிக்கைப் படுத்தப்பட்ட சில சட்டவிரோத பீடைநாசினிகளுக்கு உதாரணமாவன; சன்டெப் ப்ளஸ் (ஹெக்ஸா கொனஸோல் 5% எஸ்சீ) கிராமோசன் (பரகுவாட் டைகுளோரைட்டு 24% எஸ்எல்) லியூபொஸ் 36 ( மெனோகுரோடபொஸ் 36% எஸ்எல்) மேக் எஸ்எல் (டிறைகொன்டனோல் 40% எஸ்எல்) மேக் எஸஎல் (டிறைகுளோர் 40% எஸ்எல்) (உரு 2)

## பீடைநாசினி பிரயோகிப்பாளர்களுக்கான தற்பாதுகாப்பு உபகரணங்களுக்கு வரி விலக்களிக்குமாறு வேண்டுதல்

சரியானதும் தம்மால் சமாளிக்கக்கூடியதுமான தற்பாதுகாப்பு உபகரணங்களின் பாவனை ( த.பா.உ.) மூலம் பீதியான நிலையைக் குறைக்க முடியும் என்ற முற்படுத்திய வேண்டுதல் ஒழுங்குபடுத்தப்பட்டு அதிகார சபை மற்றும் பீடைநாசினி தொழிற்றுறை மூலம் விடுக்கப்பட்ட வந்தன. மாற்றீடாக விவசாயிகளுக்கு த.பா.உ. அவசியத்தை வலியுறுத்தும் 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஒழுங்கு விதிகள் இல 1113/5 எனும் இலக்கத்தை கொண்ட 2000.01.05 திகதியிடப்பட்ட மேலதிக அரச வர்த்தமானி வைட் ஒழுங்குவிதி 6 ( ஆ) இல் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பாக பிஸ்கால் கொள்கை திணைக்களத்தின் ( நிதி மற்றும் ஊடக அமைச்சு) 2018.09.21 ஆம் திகதியிடப்பட்ட வழிகாட்டலின் கீழ் த.பா. உபகரணங்களுக்கு 30% செஸ் வரிவிலக்களித்தல் தொடர்பான வேண்டுதல் வரைபாக்கஞ் செய்யப்பட்டு 2018 நவம்பர் மாதம் அமைச்சரவை ஞாபகக் குறிப்பாக்கப்பட்டது.

## உடன்பாட்டு கண்காணிப்பும் பாதுகாப்புப் பகுதியும்

### பீடைநாசினியின் தரம் மற்றும் இறக்குமதி அனுமதியை கண்காணிப்புச் செய்தல்

நாட்டினுள் பீடைநாசினியை இறக்குமதி செய்தல் தொடர்பான விடயம் 1980 இன் 33 ஆம் இலக்க பீடைநாசினி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் அடக்கப்பட்டுள்ளது. பீ.நா.பதிவாளர் கம்பனிகளிலிருந்து பொதிகள் தொடர்பாக தமக்கு அளிக்கப்படுகின்ற வேண்டுதல் பற்றுச்சீட்டிற்கிணங்க வழங்கப்பட்ட தினத்திலிருந்து 03 மாதங்களுக்கு செல்லுபடியாகுமாறு இறக்குமதிக்கான அனுமதியை வழங்குகின்றார். 2018 ஆம் ஆண்டில் உற்பத்தியின் மூலம் மற்றும் தரக் கட்டுப்பாடு தொடர்பாக முன்னரே தெளிவுபடுத்தப்பட்டு 835 இறக்குமதி அனுமதிகள் வழங்கப்பட்டன.

### ஆய்வுகூட நடவடிக்கைகள்

பீ.நா.ப. ஆய்வுகூடமானது ஐஎஸ்ஓ/ ஐஇசி 17025 உடன்படிக்கைக்கமைவாகவும் 2017.05.11 ஆம் திகதி முதல் 2005 இன் அதிகாரபூர்வ சான்றிதழ்களுடன் மாதிரிப் பரிசோதனைகளை சாமர்த்தியமானதும் விஞ்ஞான அடிப்படையிலும் அவை உடன்படிக்கைக்கமைவாக இருப்பதையும் பீடைநாசினி சட்டத்தை பலப்படுத்தும் வகையிலும் செய்யப்படுகின்றன. பீ.நா.ப. ஆய்வுகூடமானது சர்வதேச தேர்ச்சி பெற்ற பரிசோதனை ஒப்பந்த உறுதிப்படுத்தல்களிலும் கலந்து கொண்டது. அவையாவன, எப்ஏபீஏஎஸ் உணவு இரசாயன தேர்வுப் பரீட்சை 19244 உருளைக் கிழங்கு சீவலில் பீடைநாசினி மீதமாக்கல் 2018 ஆய்வுகூட இல. 47 பெப்ரவரி 108 ppb டெபியூகோனசோல் திட்டமிட்ட அளவு 105 ppb ( இஸட் ஸ்கோர் 0.1) அத்துடன், எப்ஏபீஏஎஸ் பரிசோதனை இல 07301, 2018 ஜனவரி பெப்ரவரி மாதங்களின் பால்மாவில் ஆசனிக் (As), கட்மியம் (Cd), இரசம் (Hg), ஈயம் (Pb) ஈ போன்ற மூலங்களின் ஒப்பந்த பெறுமான அளவு

2018 ஆம் ஆண்டில் பீ.நா.ப. ஆய்வுகூடத்தினால் ஒப்பந்த கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான 22 வெவ்வேறு தொழிற்படு தொகுதிகளைக் கொண்ட 742 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டு 261 சேர்மானங்களுக்கான சந்தைப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அதேநேரம் எப்ஏஓ குறித்த தராதரங்களுக்கமைவான சான்றிதழ்கள் 165 பரீட்சிக்கப்பட்டன. அத்துடன் பீடைநாசினி சேர்மானங்கள் தொடர்பான 90 பார உலோகக் கலப்பு அறிக்கைகளும் 66 விரிவாக்கல் செய்யப்பட்ட செல்ப் லைப் அறிக்கைகளும் மதிப்பீடு செய்யப்பட்டன. உடன்பாடான தன்மையை தெளிவுபடுத்திக் கொள்வதற்காக 19 பறிமுதல் செய்யப்பட்ட கிளைபோசேட் மாதிரிகள் பரிசீலனை செய்யப்பட்டு சட்ட நடவடிக்கைகளுக்கு ஆதரவாக 11 அறிக்கைகள் நீதிமன்றத்துக்கு விநியோகிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் நீர், பழங்கள், மரக்கறிகள் என்பவற்றில் பீடைநாசினிகளின் மாசுற்ற நிலையை பகுப்பாய்வு செய்யும் நோக்குடன் டயசினோன், குளோர்பைரிபொஸ், டெல்டாமெத்ரின், கெடுசாபொஸ், பிப்ரோனில், புரோதியோபொஸ், ஒக்ஸிபுளோர்பென், டெபியுகொனசோல், பென்நோஓட், ப்ரிடைவாக்ளோர், பிரிமிபொஸ்மீதைல், பிபென்த்ரின், புரோபெனோபொஸ் மற்றும் க்ளோரோதெலோனில் என்பவற்றை கொண்ட 4 இலிருந்து 14 ஆக விருத்தி செய்யப்பட்டது.

2018 ஆம் ஆண்டில் புதிய பழங்கள், மரக்கறிகளில் பீடைநாசினி மீந்திருக்கும் அளவை கண்காணிப்பு செய்யும் நோக்கிலும் சிறந்த விவசாய நடவடிக்கைகள் ( காப்) எனும் திட்டத்தை அமுல் செய்யவும் அதனை உறுதிப்படுத்தவும் 78 மில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்த திரவ க்ரோமெடோ கிரபி இன்டான்டம் பாரிய ஸ்பெக்ட்ரோ மீடரும் ( எல்சீ-எம்எஸ்/ எம்எஸ்) மற்றும்

ஒக்ஸில்லரி இரசாயனங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

எம்/எஸ் எஸ்ஜீஎஸ் லங்கா ( பிரைவேட்) லிமிடெட், சாட்ரெப் ஆய்வுகூடம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடம் போன்ற ஆய்வு கூட மதிப்பீடுகளில் பீ.நா.ப. அலுவலகர்கள் கலந்து கொண்டு ஒத்துழைப்பு தங்கினர். 2018 பெப்ரவரி முதல் நவம்பர் மாதம் வரையிலான காலப்பகுதியில் உபகரணங்கள் தொடர்பான 09 பயிற்சிகளும், இலங்கை அங்கீகாரம் பெற்ற சபையின் (எஸ்எல்ஏபீ) ஆய்வுகூட கணக்காய்வும் பரிசோதனைகளுக்குமான ஒத்துழைப்பு வழங்கப்பட்டதுடன் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ( ஐடீஐ), எம்/எஸ் அனெலிடிகல் இன்ஸ்ட்ரூமன்ட் ( பிரைவேட்) லிமிடெட் மற்றும் எம்/எஸ் டெக்னோ இன்ஸ்ட்ரூமன்ட் ( பிரைவேட்) லிமிடெட் பீ.நா.ப. அலுவலகத்தின் இத்தேர்ச்சி மயப்படுத்தும் நிலையின் பெறுபேறாக மாணவர்களுக்கான பல்வேறு பயிற்சிகள் நடாத்தப்பட்டன. உதாரணமாக 2018.12.21 ஆம் திகதி 20 பல்கலைக்கழக மாணவர்கள் காஸ்க்ரோமெடோகிரபி ( ஜீசீ) மற்றும் காஸ் க்ரோமெடோசிரபி-மாஸ் ஸ்பெக்ட்ரோபோடோபீடர் ( ஜீசீ/ எம்எஸ்) இன்ஸ்ட்ரூமென்டேசன் எனும் பயிற்சிகளில் கலந்துகொண்டனர்.

## உற்பத்திகளின் தரத்திற்கான உடன்படிக்கை தொடர்பில் சேர்மானப் பகுப்பாய்வு

பீ.நா.ப. அலுவலகமானது கம்பனிகளால் விடுக்கப்படுகின்ற பொதிகளின் அடிப்படையிலான வேண்டுதல் பற்றுச்சீட்டுக்கமைய இறக்குமதி அனுமதியை விநியோகித்தது. புதிதாக சேர்மானம் செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட பொதிகள் 03 மாதங்களுக்கு மேற்படாத வண்ணம் கப்பலில் அனுப்பப்படுவதை உறுதி செய்யும் வகையில் பொதிகள் தொடர்பாக மிகக் கடினமான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வழிமுறையானது பண்டங்கள் கேள்விக்கேற்ற தராதரங்களுக்கமைவாக சரியான விநியோக மூலாதாரத்திலிருந்து மட்டுமே விநியோகம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதுடன் காலக்கெடு முடிவடைந்த பழைய பொதிகளின் விநியோகத்தை விட்டும் பாதுகாக்கப்படுகின்றது. பொதிகளின் அடிப்படையில் பொதிகளை அகற்றுவதற்கான அனுமதியை வழங்கு முன்னர் பீடைநாசினி மாதிரிகள் குறுக்குத்திரையிடல் செய்யப்படுவதன் மூலம் எப்ஏஓ வின் தர நிர்ணயங்களுக்கமைய உடன்படிக்கை தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.
இக்கண்காணிப்புத் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் 742 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அன்றாட நடவடிக்கையாக பொதிகளின் அடிப்படையில் மாதிரிகளின் தரப்பகுப்பாய்வு செய்யப்பட்டு 235 பொதியிடல் மற்றும் சந்தை அகற்றல் அனுமதிகள் விநியோகிக்கப்பட்டன. இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போதைய கொள்வனவிற்கிணங்க பகுப்பாய்வு செய்வதே நோக்கமாகும்.

## எம்சீபீஏ மற்றும் டயசினோன் சேர்மானங்களின் தரத்தினை உறுதிசெய்தல்

தாவரப் பாதுகாப்பு உற்பத்தி, பீடைநாசினிகளில் எப்ஏஓ நிர்ணயங்களுக்கமைய தரத்தை உறுதி செய்யும் கடப்பாடு பீ.நா.பதிவாளரைச் சார்ந்ததாகும். அண்மைக்கால பீடைநாசினிகளின் எழுந்தமான தர மதிப்பீடுகள், உள்ளூரில் சேர்மானம் செய்யப்பட்ட சில பீடைநாசினிகள் எம்சீபீஏ (60% எஸ்எல்) மற்றும் டயசினோன் (5% ஜீ/ ஆர் உம் 50% ஈசியும்) பொதிகள் எப்ஏஓ தர நிர்ணயங்களுக்கமைய அவற்றின் விசேடமான தொழிற்படு தொகுதிகளின் தங்குதிறன் அளவிற்கமைய ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தது. எம்சிபிஏ 60% எஸ்எல் இன் 16 மாதிரிகளுள் 03

அதிகாரமற்றவை. டயசினோன் 50% ஈசி 13 மாதிரிகளுள் 5 அதிகாரமற்றவை. அதேநேரம் டயசினோன் 5% ஜிஆர் ரின் 24 மாதிரிகளுள் 7 அதிகாரபூர்வமற்றவை. உடன்பாட்டிற்கு முரணான கடிதங்கள் அனைத்து உடன்பாட்டு முரணான பொதிகளுக்கும் விநியோகம் செய்யப்பட்டதுடன் அவற்றை அழிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக ஆர்பி/2018/11-2 எனும் இலக்கத்தைக் கொண்ட சுற்று நிருபம் மூலம் மேலதிக நடவடிக்கைக்காக இலங்கையில் சேர்மானம் செய்யப்படுகின்ற தொகுதிகள் சந்தைப்படுத்தப்படு முன்னர் ஐஎஸ்ஓ/ஐஇசி 17025 எனும் அதிகாரப்படுத்தல் முறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பகுப்பாய்வு வசதிகளின் கீழ் குறுக்குப் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஏதாயினும் தேவைப்படும் சரிப்படுத்தல்கள் அல்லது வழிமுறைகள் செய்யப்பட வேண்டிய நிலைமைகள் ஏற்படுவதைக் கருத்திற் கொண்டு மிக உறுதியான தரக் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## குளோரோதெலோனில், மென்கோசெப், புரோபினெப் உற்பத்திகளின் தர உறுதிப்பாடு

பீ.நா.ப. அலுவலகத்தின் வருடாந்த செயற்திட்ட இலக்காக பீடைநாசினிகளில் நச்சுத் தன்மைக்குரித்தான மாசுக்கள் தொடர்பில் தர உறுதிப்பாட்டினை மேற்கொள்வதற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள பீடைநாசினி உற்பத்திகள், எப்ஏஓ விதப்புரைகளுக்கமைய அதிகாரம் கொண்ட பரிசோதனைக் கூடங்களில் அவற்றின் முக்கியமான தூய்மையற்ற தன்மைக்கான தர உறுதிப்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டியவையென அடையாளங் காணப்பட்டன. ( அட்டவணை 2.1.3.8)

**அட்டவணை 2.1.3.8: நச்சுத்தன்மை தொடர்பில் குறிப்பிடத்தக்க மாசுக்கள் தொடர்பான தர உறுதிப்பாடு**

| பீடைநாசினி உற்பத்தி/ இல. மாதிரிகள் | தூய்மையற்ற/ நிலைமை |
|---|---|
| குளோரோதெலோனில் 50% எஸ்சி (5) | ஹெக்சா குளோரே பென்சீன் (எச்சீபீ) முரண்படா தன்மை (<20 பிபிஎம்) |
| | டிகெக்லோரோபைபீனைல் (டீசிபி) முரண்படா தன்மை (<20 பிபிஎம்) |
| மென்கோசெப் 80% டபிள்யூ பி (5) | எதிலின் தயோயூரியா (இடியூ) முரண்படா தன்மை (<0.03%) |
| | நீர் முரண்படாதன்மை (<2%) |
| புரோபினெப் 70% டபிள்யூ பி (1) | புரோபைலீன் தயோ யூரியா பிடியு முரண்படா தன்மை (<0.03%) |

## உபயோகப்படுத்த முடியாத பீடைநாசினிகளை பராதீனம் செய்தல்

மஹா இலுப்பள்ளமயில் அமைந்துள்ள வயற்பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையமானது ( எப்சீஆர்டீஐ), விவசாயத் திணைக்களத்தின் பிராந்திய நிலையங்களில் தேக்கமடைகின்ற இனிமேலும் உபயோகப்படுத்தப்பட முடியாத பீடைநாசினிகளை சட்டரீதியான பாவனையிலிருந்து பறிமுதல் செய்து பாதுகாப்பான முறையில் வைத்திருப்பதற்கான களஞ்சியமாக சேவையாற்றி வருகிறது. மேற்படி வசதியானது பீ.நா.பதிவாளரின் தீவிர கண்காணிப்பின் கீழ் நடைபெறுவதுடன் இதற்கான அனுமதியானது கழிவு

முகாமைத்துவ வகைப்படுத்தலின் கீழ் (அனுமதிப்பத்திர இல 427/ஏ09/டபிள்யுஎம்/சிஇஏ/2018, 07.03.2018 ஆம் திகதியிடப்பட்ட) மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

முன்னரே செய்யப்பட்ட வேண்டுதல் பிரகாரம் தேக்கமடைந்திருந்த இனிமேலும் உபயோகப்படுத்தப்பட முடியாத பீடைநாசினியினை எம்/எஸ் இன்சீ எகோ சைகல் இல் 2018 டிசம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் பராதீனம் செய்யும் அவசியமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க பிரேரிக்கப்பட்ட அவத்தை – 1 முன்-பரிகரண படிமுறைப்படுத்தப்பட்ட தேக்கமடைந்த தொகுதி திண்ம பீடைநாசினியின் 1232.55 சிசி, 577.275 லீ திரவ பீடைநாசினியையும் எம்/எஸ் இன்சி எகோ சைகல் நிறைவு செய்தது. இது 2019 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் அவத்தை – 3 இல் இணைந்த பரிகரணத்திற்காக தயார் நிலையிலிருந்தது.

## தேசிய பீடைநாசினி மீதிகளைக் கண்காணிக்கும் நிகழ்ச்சித்திட்டம்

இலங்கையில் ஏற்றுமதி, இறக்குமதி செய்யப்படுகின்ற புதிய பழங்கள், மரக்கறிகளில் பீடைநாசினியின் மீதத்தைப் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகளைக் கண்காணிப்புச் செய்யும் தேசிய நிகழ்ச்சியை வலுப்படுத்துவதற்காக மொத்தம் 9.5 மில்லியன் ரூபாய் பயன்படுத்தப்பட்டது. தற்போது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரங்களுக்கமைவாக ( ஐஎஸ்ஓ/ ஐஇசி 17025:2005) 30 வகையான மரக்கறிகள் உட்பட 165 விவசாய உற்பத்திகளின் மாதிரிகள் பெருமளவில் பாவிக்கப்படுகின்ற பீடைநாசினிகளான டயசினோன், குளோர்பைரிபொஸ், பிப்ரோனில், புரோதியோபொஸ், ஒக்ஸிபுளோர்பென் மற்றும் டெபியூகொனசோல் என்பவற்றிற்காக பரிசோதிக்கப்பட்டன. இதற்கான மாதிரிகள் ஐரோப்பிய சமூகத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த பொதிகள் ஏற்றுமதி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படு முன்னர் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தாவர தடுப்புக் காப்புச் சேவையில் பெறப்பட்டன.

வரையறுத்த பெறுபேறுகளே 990 பரிசோதனைகளில் 23 இல் (2.3%) மிகக் குறைந்த கண்டுபிடித்தல் அளவு (எம்டிஎல்)0.04 பிபிஎம் எனக் கண்டுபிடிக்கப்பட்டது. வேறு வகையில் கூறுவதானால் பரிசோதனைகளிலிருந்து பீடைநாசினி மீதிகள் எதுவும் இல்லையென 97.7% மான ஏற்றுமதி பொதிகளிலிருந்து நிரூபனமாகியது. மிகுந்த அளவில் மீதியாகக் காணப்பட்ட மாதிரிகளாவன, வல்லாரை (21 மாதிரிகளுள் 10) வெங்காய பூ (13 மாதிரிகளில் 4) ஐரோப்பிய சமூகத்தின் மீதான பீடைநாசினியின் அளவு பற்றிய தீர்மானம் இப்பெறுபேறுகளின் படி முடிவுசெய்யப்படவில்லை எனினும் மீதமான பீடைநாசினியின் அளவு 0.01 பிபிஎம் ஆகும். இருப்பினும் 6 மாதிரிகள் மட்டுமே 0.1 பிபிஎம்மினை விட அதிகாரமாகவும் மற்ற மாதிரி 1 பிபிஎம்மினை மீறியதாகவும் காணப்பட்டது. அவையாவன வல்லாரையில் கடபியுகொனசோல் 1.468 பிபிஎம் ஆகக் காணப்பட்டது. அட்டவணை 2.1.3.9 இல் மீதமான பீடைநாசினிகள் தொடர்பான பூரண விபரங்கள் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1.3.9: ஐரோப்பிய சமூகத்திற்கென உத்தேசிக்கப்பட்ட விவசாய உற்பத்திகளில் ( கீரை வகை உட்பட புதிய மரக்கறிகளில்) கண்டுபிடிக்கப்பட்ட மிகக்குறைந்த (0.04 பிபிஎம்) பீடைநாசினிகளின் மீந்து நிற்கும் அளவுகள்**

| மாதிரி வகை | பீடைநாசினி வகை | மட்டம் (பிபிஎம்) |
|---|---|---|
| வல்லாரை | பிப்ரோனில் | 0.056 |
| வல்லாரை | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.130 |
| சிறகவரை | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வல்லாரை | டெபோகொனசோல் | 1.468 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.068 |

| மாதிரி வகை | பீடைநாசினி வகை | மட்டம் (பிபிஎம்) |
|---|---|---|
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.060 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.388 |
| மிளகாய் | டெபியூகொனசோல் | 0.066 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.144 |
| வெங்காயப் பூ | டயசினோன் | 0.102 |
| வெங்காயப் பூ | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.264 |
| வல்லாரை | குளோர்பைரிபொஸ் | 0.064 |
| வல்லாரை | ஒக்ஸிபுளோர்பென் | 0.126 |
| சிறகவரை | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வெண்டி | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வல்லாரை | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வல்லாரை | டெபியூகொனசோல் | 0.060 |
| வெளளரி | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |
| வெங்காயப் பூ | ஒக்ஸிபுளோர்பென் | 0.050 |
| வெங்காயப் பூ | ஒக்ஸிபுளோர்பென் | 0.048 |

இச்சமயத்தில் கண்டுபிடிக்கப்பட்ட மீதமானவை சுகாதார முறையில் கருதப்பட வேண்டியவை என்று நெறிமுறைப்படுத்தப்பட முடியாது. இருப்பினும் ஐரோப்பிய சமூக சந்தையில் புறக்கணிக்கப்படக்கூடிய சில பயிர்களான மிகக் குறைந்த மீந்து நிற்கும் அளவு 0.04 பிபிஎம் மினை விஞ்சிய வல்லாரை, வெங்காயப் பூ, வெள்ளரி, மிளகாய், வெண்டி மற்றும் சிறகவரை கருதப்பட வேண்டியவையாகும். மேலும் 148 மாதிரிகள் களத்தின் 4 வகைப் படுக்கைகளிலிருந்து பெறப்பட்டன. அவையாவன, அர்ப்பணிப்புச் செய்யப்பட்ட பொருளாதார நிலையங்கள் (டிஇசி) ஏற்றுமதி, உள்ளூர் சந்தைக்குப் பொருட்களை ( உ/ம் ( கீரைவகை) உற்பத்தி செய்கின்ற பண்ணைகள் மற்றும் பொதி செய்யும் இல்லங்கள், ஐரோப்பிய சமூகத்திற்கு ஏற்றுமதி செய்யும் மாதிரிகள், மேலும் சிறப்பியல்பாக்கம் செய்யப்பட்ட மீந்து நிற்கும் பீடைநாசினியின் அளவானது (ஐரோப்பிய சமூக பறிமுதல் செய்யப்படும் 0.01 பிபிஎம் எம்ஆர்எல் ற்கெதிராக) மேற்கூறிய மாதிரிகளின் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தில் ( ஐடிஐ) செய்யப்பட்ட பரிசோதனைகளின் தொக்கு நிற்கும் பெறுபேறுகள் 2019 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கிடைக்கக்கூடியதாக உள்ளது.

## வெளிநாட்டுப் பயிற்சிகள்

- செல்வி பி.டபிள்யூ.வை. லக்ஷானி - எட்வான்ஸ் எப்ளிகேஷன் டிரேய்னிங் போர் கௌன்டர்பீள்ட்ஸ் என்ட் இல்லீகல் பெஸ்டிசய்ட்ஸ் எனலிசிஸ் பை எப்டிஐஆர் மெசின், தேர்மோபிஷர் சயன்ட்டிபிக் இந்தியா ( பிரைவேட்) லிமிடெட் மும்பாய், இந்தியா எனும் நிறுவனத்தில் 2018 மார்ச் 19 - 23 ஆம் திகதி வரை
- செல்வி பி.டபிள்யூ.வை. லக்ஷானி - எட்வான்ஸ் எப்ளிகேஷன் டிரேய்னிங் போர் கௌன்டர்பீள்ட்ஸ் என்ட் இல்லீகல் பெஸ்டிசய்ட்ஸ் எனலிசிஸ் பை எப்டிஐஆர் மெசின், தேர்மோபிஷர் சயன்ட்டிபிக் இந்தியா ( பிரைவேட்) லிமிடெட் மும்பாய், இந்தியா எனும் நிறுவனத்தில் 2018 மார்ச் 19 - 23 ஆம் திகதி வரை
- திரு டி.ஜி.ஜி.எஸ். தர்மரத்ன - செமினார் ஒன் த கெமிகல் வெபன் சொன்வென்ஷன் என்ட் கெமிகல் சேப்டி என் செக்கியூரிடி மெனேஜ்மன் போர் மெம்பர் ஸ்டேட்ஸ் இன் த ஏஷியா ரீஜன் சீம் ரீப், கம்போடியா 2018 மே 7 - 9 ஆம் திகதி வரை
- செல்வி பி.டபிள்யூ.வை. லக்ஷானி - எனலிடிகல் ஸ்கில் டிவலொப்மன்ட் புரோக்ராம் பை ஒபிசிடயின்யூ – ஐதராபாத், இந்தியாவில் 2018 டிசம்பர் 03 - 14 ஆம் திகதி வரை
- செல்வி யூ.எஸ்.கே. அபேசிங்க - பயோ பெஸ்டிசைட்ஸ் என்ட் பெஸ்டிசைட் ரெசிடியூ எனலிசிஸ் எனும் பயிற்சி. பங்களாதேஷ் விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் காஷியூர், பங்களாதேஷ் 2018 ஒக்டோபர் 7 - 11 ஆம் திகதி வரை

## விருதுகள்

2018 ஆம் ஆண்டு விவசாயத் திணைக்களத்தின் அஸ்டா விழாவில் பின்வரும் விருதுகள் கிடைக்கப்பெற்றன.

- தெ பெஸ்ட் சயன்ட்டிபிக் பேபர் எனும் விருது செல்வி சி. மாகமகே - "எனலிஸிஸ் ஒப் பெஸ்டிசைட் ரெசிடியூஸ் இன் புருட்ஸ் என் வெஜிடபள்ஸ் எக்ஸ்போர்ட் டு த இயூரோபியன் யூனியன்"
- தெ பெஸ்ட் பிரசன்டர் எனும் விருது செல்வி பி.டபிள்யூ.வை. லக்ஷானி - "பெஸ்டிசைட்ஸ் ரெசிடியூஸ் இன் ஆல்டர்னன் தெரா செசிலிஸ் என்ட் சென்டெல்லா ஏசியாடிகா க்ரோவ்ன் இன் சிலெக்டட் லோகேஷன்ஸ் இன் சிறி லங்கா"
- தெ பெஸ்ட் பிரசன்டர் எனும் விருது செல்வி சி. மாகமகே - " பொடென்சலி டொக்சிக் டிரேஸ் மெடல்ஸ் இன் மஹாவலி ரிவர் இன் சிறி லங்கா டியூரிங் தெ ட்றை சீசன்"

## அலுவலர் பட்டியல்

| பதவி | அனுமதிக்கப்பட்ட எண் | தற்போதுள்ள எண் |
|---|---|---|
| பீடைநாசினி பதிவாளர் | 01 | 01 |
| தலைமை விஞ்ஞானி | - | 01 |
| பீடைநாசினி பிரதிப் பணிப்பாளர் | 01 | - |
| உதவி விவசாய பணிப்பாளர் (ஆராய்ச்சி) | 08 | 03 |
| உதவி விவசாய பணிப்பாளர் (அபிவிருத்தி) | 02 | 01 |
| உதவி விவசாய பணிப்பாளர் (ஆராய்ச்சி - ஒப்பந்த) | - | 01 |
| ஆராய்ச்சி உதவியாளர் (விசேட தரம்) | 01 | - |
| விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் | 02 | 01 |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (விவசாயம்) | 02 | 02 |
| அபிவிருத்தி அலுவலர் | 04 | 04 |
| விவசாயப் போதனாசிரியர் | 06 | 07 |
| ஆராய்ச்சி உதவியாளர் | 07 | 09 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 05 | 05 |
| தொழில்நுட்ப உதவியாளர் | 03 | 01 |
| சாரதி | 03 | 03 |
| களஞ்சியப் பொறுப்பாளர் | 01 | 01 |
| ஆராய்ச்சி உப உதவியாளர் | 01 | - |
| அலுவலக தொழிலாளி | 01 | - |
| காவலாளி | 02 | 02 |
| தொழிலாளர் | 06 | 05 |
| தொழிலாளர் (ஒப்பந்த) | 02 | 02 |
| **மொத்தம்** | **58** | **49** |